THE THANJAVUR MAHARAJA SERFOJI'S
THANJ
2? NOV

श्रीः

श्रीमते नारायणाय नमः ॥
श्रीमते विष्णुचित्ताय नमः ॥
श्रीमते रामानुजाय नमः ॥
श्रीमत्कृष्णसूरये नमः ॥
श्रीमद्वरवरमुनये नमः ॥

भक्तानुग्राहकं पुण्यं प्रतिपक्षनिरासकम् ।
जीयादाचन्द्रनक्षत्रं श्रीवैष्णवसुदर्शनम् ॥

396

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

பராங்குச திரு அவதார-ஸூ 5082
ரௌத்ரி-ஸூ கார்த்திகை-மீ சோதி-33 ஒளி-12

மாதப்பத்திரிகை

ஸ்தாபகர்: ஸ்ரீ உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.

ஆசிரியர்: "வித்₃யா விஶாரத₃" "தி₃வ்யார்த்த₂ ரத்னநிதி₄"
ஸ்ரீ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வகேட்,
[பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் அக்ராஸனர்,
'ஸ்ரீராமாநுஜமிஷன்' உபதலைவர், கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபையின் உபதலைவர், கோயில் உபயவேதாந்த ப்ரசார ஸபையின் உபதலைவர்.]
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி-17.

உதவி ஆசிரியர்: "உத்தம கு₃ண ஶீல:"
ஸ்ரீ. ராம ஐயங்கார், அட்வகேட்,
[கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபையின் நிர்வாக அங்கத்தினர்]

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் குடும்ப தர்ம சொத்துகளின் ஆதரவில் இது வெளிவருகிறது.

வருடச்சந்தா ரூ. 10. 27-11-1980 தனிப்பிரதி ரூ. 1.

விஷயஸூசிகை

1.	திவ்யப்ரபந்தப் பதிப்பு—செய்திகள்	1—4
2.	ஸுதர்சனர் பதில் (நான்காவது சதகம்) (53-60)	5—12
3.	கீ3தா வ்யாக்2யானம் (537-544)	13—20
4.	ப்ரபந்நாம்ருதம் (553-560)	21—28
5.	விஷ்ணுசித்தவிஜயம் (813-820)	29—36
6.	நாச்சியார் திருமொழி (233-240)	37—44
7.	திருமாலை (249-256)	45—52
8.	வார்த்தாமாலை (249-256)	53—60
9.	சாரீரககாரிகாவளி (141-144)	61—64
10.	செய்திகள்	65—66

சந்தா செலுத்தியவர்கள்

		ரூ.
1.	ஸ்ரீ A. பரமசிவம், பழனி (418)	10
2.	,, A S. ரங்கராமாநுஜம் அய்யங்கார், குளிப்பந்தண்டலம் (404)	10
3.	,, R. கிருஷ்ணன், சென்னை-20 (406)	10
4.	,, ஸ்ரீகிருஷ்ண எலக்ட்ரிகல்ஸ், திருக்கழுக்குன்றம் (406)	10
5.	,, C. R வராஹாச்சாரியார், கொத்திமங்கலம் (404)	10
6.	,, T. S. ரங்கசாமி, சென்னை-4 (407)	12
7.	,, பாவனசாரியஸ்வாமி திருமாளிகை, ஸ்ரீரங்கம் (406)	10
8.	,, S. கோபாலாச்சாரியர், சென்னை-17 (393)	10
9.	,, பொன்னப்பபட்டாசாரியர், உப்பிலியப்பன்கோயில் (409)	25
10.	,, P. K. பார்த்தசாரதி, வேலூர் (408)	22
11.	,, T. V. சேஷாத்ரி, சென்னை-5 (405)	10
12.	,, G. மௌனசாமிநாயுடு, போடிப்பட்டி (406)	20
13.	,, T. A. சேஷாச்சாரி, சென்னை (387)	10
14.	,, B. ஜானகிராம், திருச்சி-18 (405)	10
15.	,, S. வெங்கட்ராம அய்யங்கார், ஸ்ரீரங்கம் (399)	10
16.	,, S. T. ராமஸ்வாமி, தேவகோட்டை (396)	10
17.	,, R. அழகியமணவாளராமாநுஜதாஸர், மதுரை (404)	10
18.	,, R. ஜகந்நாதன், மதுரை (408)	12
19.	,, S. ராமாநுஜம், சென்னை-21 (408)	12
20.	,, K. A. தேவராஜன், சென்னை-1 (399)	10
21.	,, K. V. மோஹன்ராம், வேலூர் (408)	12
22.	,, கு. சடகோபன், சங்கர்நகர் (405)	10
23.	,, சுந்தரராமாநுஜதாஸர், சினுகாம்பட்டி (396)	10
24.	,, C. சுகுமார், திருச்சி-17 (407)	12
25.	,, தி. ராகவாச்சாரி, ஸ்ரீரங்கம் (405)	10
26.	,, S. ஸம்பத்நாராயணன், ஸ்ரீரங்கம் (403)	10
27.	,, K. R. M. எஸ்டேட், மன்னார்குடி (406)	10
28.	,, P. T. ஜானகிராமன், சென்னை-18 (398)	12
29.	,, M. R. ஸ்ரீநிவாஸன், நாக்பூர் (413)	12
30.	,, M. R. வெங்கட்ராமசெட்டியார், கள்ளக்குறிச்சி (407)	12
31.	,, K. S. வரதராஜன், பம்பாய்-19 (407)	12
32.	,, K. நாராயணரெட்டியார், சென்னை (408)	12
33.	,, T. N. கிருஷ்ணமாச்சாரியார், வள்ளியூர் (408)	12
34.	,, R. எதிராஜன், சென்னை-3 (396)	10
35.	,, K. E ராமசந்திரன், கோவை-19 (387)	15

(தொடர்ச்சி ராப்பர் 3ல் கீழே காண்க.)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-33] [ஒளி-12

திவ்யப்ரபந்தப் பதிப்பு

ஸ்ரீ உ. வே. வரதாசார்யஸ்வாமி ரூ 10/- விலைக்கு அளித்த பிரதிகள் தீர்ந்துவிட்டன என்று நாம் சென்ற மாதமே அறிவித்திருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் நம்மிடமும், வரதாசார்யஸ்வாமியிடமும் 'பிரதிகள் கிடைக்குமா' என்று நேரிலும், தபால் மூலமாகவும் கேட்டுவருகிறார்கள். தபால் மூலம் கேட்டவர்களனைவருக்கும் பதில் எழுதுவது இயலாதாகையால் ஷஷ்ட்யப்தபூர்த்திவரை பொறுத்திருக்கும்படி சென்ற மாதம் அறிவித்ததை அவர்களுக்கு மறுபடியும் இதன் மூலம் நினைவுபடுத்துகிறோம். M. O. மூலம் சலுகை விலைப் பதிப்புக்காகப் பணம் அனுப்பினால் திருப்பி அனுப்பப்படும் என்பதையும் மறுபடியும் நினைவுபடுத்துகிறோம். ஏற்கனவே தபால் மூலம் பிரதிகளை அனுப்பவேண்டித் தொகை அனுப்பியவர்களுக்குப் பிரதிகள் அனுப்பிவருகிறோம். மேலும் பிரதிகள் பெறவேண்டியவர்கள் பலர் இருப்பதால் அவர்களுக்குப் பிரதிகள் அனுப்ப இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் ஆகக்கூடும். சலுகைவிலையில் அல்லாமல் உள்ள விலைக்கே பிரதிகள் பெறவேண்டிப் பலர் கடிதம் எழுதுகிறார்கள். சலுகைவிலைப் பிரதிகள் மேலும் எவ்வளவு தேவையாயிருக்கும் என்பது இன்னும் உறுதியாகத் தெரியாததால், வருகிற தை மாத இதழிலேயே உள்ளவிலைக்குப் பிரதிகள் அளிப்பதுபற்றி அறிவிக்கப்படும். அதுவரை அவர்களைப் பொறுத்திருக்கவேண்டுகிறோம். ஏற்கனவே முதலாயிரத்தை நம்மிடம் வாங்கியவர்கள் இரண்டாவது ஆயிரமும், மூன்று நான்காமாயிரமும் தேவையானால் ரூ 8 அனுப்பி இரண்டாவதாயிரமும், ரூ 12 அனுப்பி மூன்று நான்காமாயிரமும் பெற்றுக்கொள்ளலாம். இவர்களுக்கு முறையே ரூ 2, ரூ 3 V. P தபால் செலவு ஆகும். முதலாயிரம் பிரதிகள் தீர்ந்துவிட்டபடியால் தனியாகக் கிடைக்காது. நமது பிங்களவருஷத் திட்டத்தின்படி பிரதிகள் பெறவேண்டியவர்களும் தை மாதத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

மஹநீயரின் ஷஷ்ட்யப்தபூர்த்தி

நாச்சியார்கோவில் ஸ்ரீ உ. வே. V. நாராயண பட்டாசார்ய ஸ்வாமிக்கு திருக்குடந்தையில் சோலையப்பமுதலித்தெரு கஸ்தூரி ரங்கய்யங்கார் கல்யாண மண்டபத்தில் 5—11—80 புதனன்று ஷஷ்ட்யப்தபூர்த்தி சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் ஸுதர்சனம் ஆசிரியர் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. ஸ்ரீவ்யாஸ ராஜமட₂ ஆஸ்த₂ான வித்₃வான் ஸ்ரீ M. ராமராவ் அவர்கள் கீழ்க்கண்ட ஶ்லோகங்களின் மூலம் பட்டாசார்ய ஸ்வாமியின் பெருமைகளைப் பேசிப் பாராட்டினார்:—

ஸ்ரீவைகா₂நஸஶாஸ்த்ரஸங்க₄நிபுண: ஸ்ரீவைஷ்ணவோ யோ த்₃விஜ:
ஸ்ரீஸ்ரீவாஸபத₃ாரவிந்த₃ப₄ஜநாநந்த₃ாப்₃தி₄மக்₃நஸ்ஸத₃ா।
ஸத்ஸந்தானஸம்ருத்₃தி₄-ஸத்₃கு₃ருக்ருபா-ஷஷ்ட்யப்₃த₃பூர்ணஶ்ச யோ
ஸம்பூஜ்யஸ்ஸததம் ஸ்வத₃ாரநிரத: நாராயணார்யாபி₄த₄: ॥
ரூபமாரோக்₃யமைஶ்வர்யம் ஶதாயுஷ்ட்வாதி₃காந்யபி।
லக்ஷ்மீநாராயணோ த₃த்₃யாத் ஸுப்ரஸந்ந: ஸத₃ா ப்ரபு₄: ॥
இதி ஸ்ரீராமராயேண கும்ப₄கோ₄ணநிவாஸிநா।
ஶௌநகாந்வயபூ₄தேந த₃ம்பத்யோ: ஶ்ரேயஸே க்ருதா ॥

[ஸ்ரீவைகா₂நஸ ஶாஸ்த்ரங்களில் நிபுணராய், ஸ்ரீவைஷ்ணவ ப்₃ராஹ்மணராய், திருநறையூர் நம்பியின் திருவடித் தாமரைகளில் அன்பாகிற கடலில் எப்போதும் மூழ்கியிருப்பவராய், நன்மக்கட் பேறும் ஸத₃ாசார்ய க்ருபையும் அறுபதுபிராயமும் நிரம்பப்பெற்றவராய், ஸ்வத₃ாரநிரதரான நாராயணாசார்யர் எப்போதும் கொண்டாடத்தக்கவர். ரூபம், ஆரோக்₃யம், செல்வம், நிறைந்த ஆயுள் முதலிய சிறப்புகளை ஸர்வேஶ்வரனாய், மிகவுகப்புடையவனான லக்ஷ்மீ நாராயணன் இவருக்கு எப்போதும் அளிக்கட்டும் — என்று கும்பகோணத்தில் வாழ்பவராய், ஶௌநககோ₃த்ரத்தில் உதித்தவரான ஸ்ரீராமராயரால் இந்த தம்பதிகளின் சிறப்பின் பொருட்டு வாழ்த்து உரைக்கப்பட்டது] திருக்குடந்தை ஸ்ரீ உ. வே. R. பத்மநாபய்யங்கார் ஸ்வாமி, புரிசை ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி, ப்₃ரஹ்மஸ்ரீ ஐயாசாமி ஶ்ரௌதிகள், பதரீ நாராயணாச்சார், தலைமை வகித்த ஸுதர்சனம் ஆசிரியர் ஆகியோர் ஸ்வாமியைப் பாராட்டினார்கள். ஷஷ்ட்யப்த பூர்த்தியன்றும் வைகாநஸ பட்டாசார்யர்கள் பலர் பாராட்டிப் பேசினார்கள். ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமியும் அநுக்ரஹ ஸ்ரீமுகம் அருளியிருந்தார். ஸ்வாமி பல்லாண்டு வாழ்க.

ஸ்ரீரங்கத்தில் ஶதாபி₄ஷேகம்

சென்னையில் வாழும் அட்வகேட் ஸ்ரீ உ. வே. P. B. அநந்தாசார்ய ஸ்வாமிக்கு 1—11—80 அன்று ஸ்ரீரங்கம் முதலியாண்டான் திருமாளிகையில் ஶதாபி₄ஷேகம் உப₄யவேத₃பாராயணங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ உ. வே. ஶதாபிஷேகம் கோவிந்தநரஸிம்ஹாசார்ய

ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. வரதாசார்யஸ்வாமி, ஸுதர்சனம் ஆசிரியர் ஆகியோர் அநந்தாசார்யஸ்வாமியைப் பராட்டிப் பேசினர்; ஸ்வாமி பல்லாண்டு வாழ வாழ்த்தினர்.

ஸ்ரீரங்கத்தில் பகவத்விஷய காலக்ஷேப சாற்றுமுறை

சென்ற ஒன்றரை வருஷகாலமாக ஸ்ரீரங்கம் கீழச்சித்திரைவீதி ஸ்ரீ உ. வே. R. சிங்கமய்யங்கார் ஸ்வாமி திருமாளிகையில் ஸ்ரீரங்கம் நப்பின்னை நிலயம் ஸ்ரீ உ. வே. S. ராமசாமி அய்யங்கார் (கண்ணன்) ஸ்வாமி நடத்திவந்த ''பகவத்விஷய'' காலக்ஷேபம் கார்த்திகை-மீ 5-உ (20—11—80) அன்று பூர்த்திபெற்று சாற்றுமுறை மிகவும் விமரிசையாக நடைபெற்றது. திருவெள்ளறை மேலத்திருமாளிகை ஸ்ரீ உ. வே. அம்மாள் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருநாங்கூர் வித்வான் ஸ்ரீ உ. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. P. B. K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய சபா காரியதரிசி ஸ்ரீ உ. வே. திருமலாசார்ய ஸ்வாமி முதலியவர்கள் எழுந்தருளி உபந்யாஸக ஸ்வாமியைப் பாராட்டினார்கள். ஸ்ரீ உ.வே.சிங்கமய்யங்கார் ஸ்வாமி அனைவருக்கும் க்ருதஜ்ஞதை தெரிவிக்க, சாற்றுமுறை இனிது நிறைவடைந்தது.

உபந்யாஸச் செய்திகள்

(1) ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையில் ஸ்ரீ உ. வே. சிங்கமய்யங்கார் ஸ்வாமியால் சென்ற ஆவணி-மீ 21-ம் தேதி தொடங்கி வாரம் மும்முறையாக நடத்தப்பட்ட ''சிறிய திருமடல்'' காலக்ஷேபம் புரட்டாசி 12-உ நிறைவடைந்து சாற்றுமுறை விமரிசையாக நடைபெற்றது.

(2) திருச்சி ஜில்லா கரியமாணிக்கம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் சந்நிதியில் புரட்டாசி-மீ 17-உ தொடங்கி ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. சிங்கமய்யங்கார் ஸ்வாமியால் நிகழ்த்தப்பட்ட ''சிறியதிருமடல்'' காலக்ஷேபம் புரட்டாசி-மீ 24-உ வெள்ளிக்கிழமை சாற்றுமுறையோடு நிறைவுபெற்றது. ஆஸ்திகர்கள் அனைவரும் அன்வயித்து இன்புற்றனர்.

(3) கரியமாணிக்கம் வரதராஜப்பெருமாள் கோவில் திருமங்கையாழ்வார் திருநக்ஷத்திரத்தன்று ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. ராமஸ்வாமி அய்யங்கார் (கண்ணன் ஸ்வாமி), ஸ்ரீ உ. வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. சிங்கமய்யங்கார் ஸ்வாமி ஆகியோர் உபந்யாஸங்களும், ததீயாராதனையும் சிறப்பாக நடைபெற்றது.

(4) மதுரை T. V. S. நகரில் 1980 அக்டோபர் கடைசியில் ஸ்ரீ உ. வே. இளையவில்லி பூவராஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீராமாயண உபந்யாஸமும், கண்ணிநுண்சிறுத்தாம்பு காலக்ஷேபமும், ஸ்ரீராமாநுஜ கூடத்தில் 'ஸத்ஸம்ப்ரதாயம்' பற்றி உபந்யாஸமும் நிகழ்த்தி மதுரை மாநகரவாஸிகளால் கௌரவிக்கப்பெற்றார்.

(5) பங்களூர் ஸத்ஸம்ப்ரதாய காலக்ஷேபகோஷ்டியின் ஆதரவில் சென்ற ஒரு வருஷகாலமாக ஸ்ரீ உ. வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமியால் நிகழ்த்தப்பெற்றுவந்த உபதேசரத்தினமாலை காலக்ஷேபம் 19—10—80 ஞாயிறு மாலை விசேஷமாகச் சாற்றுமுறை செய்யப்பட்டது. தொடர்ந்து ஸ்வாமி ஸ்ரீவசநபூஷண காலக்ஷேபம் ஸாதிக்க ஆரம்பித்துள்ளார்.

(6) செகந்திராபாத் ஸ்ரீராமாநுஜசித்தாந்த கைங்கர்ய சங்கத்தின் சார்பில், செகந்திராபாத், சிவாஜிநகர், கோனேரி தெருவில் இருக்கும் ஸ்ரீவெங்கடேச்வரப் பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீமணவாள மாமுனிகள் திருநக்ஷத்திர உத்ஸவம், ஸ்ரீ உ. வே. மணவாள ஐயங்கார் (அர்ச்சகர், ஸ்ரீவெங்கடேச்வரப் பெருமாள்கோவில், பிட்ஸ்பர்க். USA) அவர்களின் உபயமாக, 2—11—80 முதல் 11—11—80 வரை நடைபெற்றது. பிரதி தினமும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் 'குருபரம்பராப்ரபாவம்' பற்றின உபந்யாஸமும் நடைபெற்றது.

(7) கோவனூரில் யதிராஜ ராமாநுஜதாசர் தலைமையில் 11—11—80 அன்று தோப்புஸ்வாமியால் 'மணவாள மாமுனிகள் பெருமை' பற்றி உபந்யஸிக்கப்பட்டது. கோவை பெரியநாயக்கன் பாளையம் கரிவரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் 12—11—80 அன்று தோப்பு ஸ்வாமியால் 'உபாய, உபேயம்' பற்றியும், புலவர் அரங்கநாதன் 'வைஷ்ணவர் யார்' என்பது பற்றியும், அப்பன் தேவராஜ ராமாநுஜதாசர் 'ஆசார்ய வைபவம்' பற்றியும், வேலூர் கேசவதாஸ் 'பக்திநெறி' பற்றியும் உபந்யஸித்தனர்.

(8) சென்னை அமைந்தகரை ஸ்ரீப்ரஸன்ன வரதராஜப்பெருமாள் கோவிலில் பிள்ளைலோகாசார்யர் அவதார மஹோத்ஸவத்தில் 16—11—80ல் ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி 'ஸ்ரீவசனபூஷணஸாரம்' பற்றியும், 17—11—80ல் பிள்ளைலோகம் ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார்ஸ்வாமி 'திருமந்த்ரார்த்தஸாரம்' பற்றியும், 18—11—80ல் ஸ்ரீ உ. வே டாக்டர் K. A. மணவாளன் அவர்கள் 'ஆசார்ய வைபவம்' பற்றியும் உபந்யஸித்தார்கள்.

(9) திருச்சி புத்தூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண ஸந்நிதியில் ஸுதர்சனம் ஆசிரியராலும், ஆதிவராஹப்பெருமாள் ஸந்நிதியில் கோருகொண்டா ஸ்ரீ உ. வே. பராசரபட்டர் ஸ்வாமியாலும் கைசிக ஏகாதசியன்று கைசிகபுராண உபந்யாஸம் நிகழ்த்தப்பட்டது.

(10) துறையூர் ஸ்ரீஸத்யநாராயணப்பெருமாள் ஸந்நிதி கோடி அர்ச்சனையில் 14—11—80 பொய்கையாழ்வார் திருநக்ஷத்திரத்தன்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ உ. வே. அலங்காரம் தேவராஜய்யங்கார்ஸ்வாமி 'முவர்கண்ட முதல்வன்' என்னும் தலைப்பில் உரையாற்றினர்.

S. வேங்கடம், சமயபுரம்.

62. "தேவி" பத்திரிகையின் (5–11–80) தீபாவளி மலரில் தொடக்கக் கட்டுரையில் கண்ணதாசன் "கீதையில் கண்ணன் சொல்லும் ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள் அவனிடமே மாறிமாறி வருகின்றன. துரியோதனனிடம் தூது சென்று கெஞ்சும்போது. ஸத்வகுணம் மேலோங்கி நிற்கிறது. ரஸ லீலையில், ரஜோகுணம் விளங்குகிறது. போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசிக்கையில் (போர் புரியவேண்டிய சமயத்தில் தாமதம் செய்யும்) அவனது தமோகுணமும் விளங்குகிறது" என்று கண்ணனிடம் அபசாரப்பட்டுள்ளார். "ராமாவதாரத்துக்குத் தன்னம்பிக்கை குறைவு. ராமாயணத்தில் எந்த இடத்திலும் ராமனுக்கென்று தனி லக்ஷ்யமில்லை." என்று ராமனிடமும் அபசாரப்பட்டுள்ளார். இவருக்கு. கீதைக்கு உரையெழுதத் தகுதியுண்டா?

கீ₃தை உபதே₃ஶித்தவுடன் கண்ணன் "இதைத் தவம் புரியாதவனுக்குச் சொல்லிவிடாதே. என்னிடம் ப₄க்தியற்றவனுக்கு ஒருபோதும் உபதே₃ஶிக்காதே. ஆசார்ய கைங்கர்யம் செய்யாதவனுக்குச் சொல்லிவிடாதே. என்னிடம் அஸூயையுள்ளவனுக்குச் சொல்லவே சொல்லாதே" என்று பதறினான். தகுதியற்றவர்களுடைய காதில் இந்த மோக்ஷஶாஸ்த்ரம் விழுந்தால் அவர்கள் அதைத் தாறுமாறுக்கிக் கெடுத்து விடுவார்கள் என்று ப₄யந்தே கண்ணன் இப்படிக் கூறினான். எத்தகுதியும் இல்லாதவர்கள் ஶாஸ்த்ரங்களுக்கு விளக்கம் எழுதப்புகுந்தால் கீ₃தையைப் பற்றியும், கண்ணனைப் பற்றியும், ராமனைப் பற்றியும் கண்ணதாசன் எழுதியிருப்பது போன்ற விளக்கங்கள்தான் வரும் என்று கண்ணன் பயந்தது நடந்துவிட்டது. கீ₃தை 17-ம் அத்தியாயத்தில் அர்ஜுனன் கேட்க, கண்ணன் ஸத்வ ரஜஸ் தமோ கு₃ணங்களை விரிவாக விளக்கி, ஸத்வ கு₃ணத்தையே கைக்கொள்ளவேண்டுமென்று பன்னிப்பன்னி உரைத்திருக்கிறான். கண்ணன் சொன்ன ஸத்வரஜஸ்தமோகு₃ண லக்ஷணங்களையே புரிந்துகொள்ளாமல், கண்ணனுக்கே ரஜஸ்தமோ கு₃ணங்கள் உண்டு என்று ஒருவர் எழுதுவதும், அவர் கீ₃தைக்கே விளக்கம் எழுதியவராயிருப்பதும்

இந்த நாட்டுக்கே பெரிய அவமானமாகும் என்பது சொல்லாமலே விளங்கும். ஒரு லக்ஷ்யமும் இல்லாத ஒருவர், தன்னம்பிக்கையே அற்ற ஒருவர் தன்னைப்போலவே அனைவரையும் பார்த்து, ராமனிடம் தன் குணங்களை ஏறிட்டிருப்பதைக் குறித்தும் நாம் ஆச்சர்யப்படுவதற்கில்லை. இத்தகைய பிதற்றல்களை வெளியிடும் பத்திரிகைகளே நம் நாட்டு இளைஞர்களைக் கெடுத்து வருகின்றன.

S. வேங்கடம். சமயபுரம் & க. இராசகோபாலன், சென்னை-4.

63. இதே 'தேவி' பத்திரிகையிலும், 'இதயம்' (9-11-80) பத்திரிகையிலும் கிருபானந்தவாரியார் "நரகாசுரனைக் கொன்ற நாள் என்னும் காரணத்தால் தீபாவளியைக் கொண்டாடுவதாகக் கூறுவது தவறு. அப்படிக் கொள்ளுவதானல் ராவணன், இரணியன் முதலான மற்ற அரக்கர்களைக் கொன்ற நாளையும் கொண்டாடவேண்டிவரும். ஆகையால் தீபமங்களஜோதியாக விளங்கும் சிவபெருமானை, அவரது இடப்பாகம் பெறும் பொருட்டு கௌரி நோற்றதாய், தீபங்களை வரிசையாக வைத்து வணங்குவதான கேதாரகௌரீவிரதமே தீபாவளி என்று கொள்ள வேண்டும்" என்று எழுதியிருப்பது சரியா?

இங்கு வாரியார் உலகமறிந்த ஒரு செய்தியை வேண்டுமென்றே மறைத்துவிட்டார். நரகாசுரன் தான் இறந்த ஐப்பசி சுக்ல சதுர்தசி பின்னிரவுவேளையில் எல்லோரும் தைலஸ்நானம் செய்து, புதிது உடுத்தி, தீபங்களை ஏற்றிக் கொண்டாட வேண்டும் என்று கண்ணபிரானிடம் வரம்வாங்கிப் பெற்றதாகவும், அதன்படியே அந்த சமயத்தில் அனைவரும் தீபாவளியைக் கொண்டாடுவதாகவும் பொதுஜனங்களிடையே நீண்ட நாளாக வரலாறு வழங்கிவருகிறது. ஸ்ரீப்ரச்னஸம்ஹிதை முதலான சாஸ்த்ரங்களிலும் இவ்விஷயம் உள்ளது. வேறு எந்த அரக்கனே அசுரனே இப்படி வரம்வேண்டியதாக வரலாறு இல்லையாகையால் அவர்களைக் கொன்றநாளைக் கொண்டாட வேண்டிய அவசியமில்லை. கேதாரகௌரீவிரதம் சைவர்களால் மட்டும் தீபாவளியை ஒட்டிவரும் அமாவாஸ்யையில் கொண்டாடப்படும் விரதமாகும். இவ்வருஷத்தைப்போல் பல வருஷங்களில் அது தீபாவளிப் பண்டிகைக்கு மறுநாளும் வரும்.

ஆகையால் உலகமறிந்த செய்தியை மறைத்து, இரண்டையும் வாரியார் ஒன்ருக்கப்பார்ப்பது அவரது சைவாபி,மானத்தையே காட்டுகிறது.

V. ஸ்ரீநிவாஸன், திருச்சி-17

64. 16—9—80 ஹிந்து பத்திரிகையில் புத்தக விமர்சனப் பகுதியில் சென்னை சர்வகலாசாலையால் சேர அரசர்களைப்பற்றி C. பாலசுப்பிரமணியன் என்பவரால் எழுதப்பெற்ற (ரூ. 25 விலையுள்ள) புத்தகத்தை ஸ்ரீ A. N. மகரபூஷணம் என்பவர் விமர்சிக்கும்போது "It was at this period that Malayalam replaced Tamil. Under what circumstances a whole people who had shaped and enriched it decided to give up a fully developed and adequate language in favour of a new venture will never perhaps be known." *[இந்தப் பதினொன்றும் நூற்றுண்டிலேயே கேரளநாட்டில் தமிழுக்கு பதிலாக மலையாளம் நாட்டுமொழியாக ஏற்பட்டது. ஒரு பெரிய நாட்டைச் சேர்ந்த அத்தனை ஜனங்களும் தாம் உருவாக்கி வளர்த்த ஒரு மொழியை (தமிழை), அதிலும் நன்கு வளர்ந்து எல்லாத் தகுதிகளும் பெற்றிருந்த மொழியை எந்தச் சூழ்நிலையில் முழுவதும் கைவிடவும், அதற்கு பதிலாக ஒரு புது மொழியைக் கைக்கொள்ளவும் முடிவுசெய்தார்கள் என்பது பெரும்பாலும் என்றும் அறியமுடியாததாகவே உள்ளது] என்று எழுதியுள்ளார். இதற்குக் காரணத்தை ஊகிக்க முடியுமா?*

பதினோராம் நூற்றுண்டு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு பெரும்புரட்சி நடைபெற்ற காலம். எம்பெருமானுர் தோன்றி விஶிஷ்டாத்,வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே உண்மையான வைதி,கமதம் என்று அசைக்கமுடியாதபடி ப,ாரததேசமெங்கும், சிறப்பாகத் தமிழ்நாட்டிலும் நிலைநாட்டிய காலம் இதுவேயாகும். கேரளநாட்டில் அப்போது ஆதி,சங்கரப,க்தர்களான நம்பூதிரிகள் பெருவலிமைபெற்று விளங்கிஞர்கள். அவர்கள் 'இந்த இராமாநுசப் பெருவெள்ளம் கேரளநாட்டிலும் பாய்ந்துவிடுமோ' என்று பெரிதும் அச்சமுற்றிருக்க வேண்டும். கேரளநாட்டிலுள்ள திவ்யதேசங்களைத் திருத்துவதற்காக எம்பெருமானுர் திருவனந்தபுரம் எழுந்தருளிஞர்

என்றும், பத்மநாபனின் அர்ச்சகர்களான நம்பூதிரிகளின் பிரார்த்தநையினால் அவ்வெம்பெருமான் எம்பெருமானார் உறங்கும்போது, அவரை உறங்கும் கட்டிலோடு திருக்குறுங்குடியில் திருப்பரியட்டப் பாறைக்குக் கொண்டுவந்து சேர்த்து விட்டான் என்றும், விழித்தெழுந்த எம்பெருமானார் 'எம்பெருமான் திருவுள்ளம் இதுவே' என்று உணர்ந்து கேரள திவ்யதேசங்களைத் திருத்தும் முயற்சியைக் கைவிட்டார் என்றும் வரலாறு கூறுகிறது. "ராமாநுஜருடைய ஆயிரக்கணக்கான ஶிஷ்யர்கள் கேரளதேசத்திற்கு வந்து, அத்வைதத்தைத் தோல்வியுறச்செய்து, விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை நிலைநாட்டி விடுவார்கள். நம்முடைய பிழைப்புக்கு ஆபத்து வந்துவிடும்" என்னும் பயத்தாலேயே மிக வலிமைபெற்றிருந்த கேரளநம்பூதிரிகள் விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ வித்வான்கள் கேரளம் வந்து பொதுமக்களிடம் பிரசாரம் செய்யமுடியாதபடி தமிழை நாட்டைவிட்டுத் துரத்தி, புது மொழியான மலையாளத்தை உருவாக்கிப் பொதுமக்களிடையே நிலைநிறுத்தியிருக்கவேண்டும். தமிழ்நாட்டோடு நில்லாமல், ஆந்திர நாட்டிலும், கன்னட நாட்டிலும், வடநாட்டிலுங் கூடச் சிறப்பாகப் பரவியிருக்கும் விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதம் கேரளநாட்டில் அடியோடு பரவாமலிருப்பதே இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

K. ராஜகோபாலன், 20 காந்தி ரோடு, தஞ்சாவூர்.

65. உங்களுடைய (ஐப்பசி-மீ?) தலையங்கத்தையும், 'ஸுதர்சனர் பதில்'கள் சிலவற்றையும், பார்த்தேன். அவை கிணற்றுத் தவளை போன்ற குறுகிய மனப்பான்மையையும், மத வெறியையும் காட்டுகின்றனவேயொழிய விஷய ஞானத்தைக் காட்டவில்லை. நாத்திகர்கள் ஆத்திகத்தைக் கடுமையாகத் தாக்கிவரும் இந்நாளில் நீங்கள் உங்களையறியாமல் ஐந்தாம் படை வேலை செய்து ஆத்திகத்தை அழித்து வருகிறீர்கள் என்பதை உங்களுக்கு உணர்த்தி, இந்த அழிவு வேலையை விட்டு ஆக்க வேலைகளைச் செய்யும்படி, ஒரு வயதான ஆத்திகன் என்ற முறையில் தங்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன்.

ஸுதர்சனத்தைத் தொடர்ச்சியாகப் படித்து வரும் பல்லாயிரக்கணக்கான அறிவாளிகளின் கடிதங்களுக்கிடையில்,

ஓரிரு இதழ்களைப் படித்துவிட்டு வசைபாடும் தங்களுடைய தைப் போன்ற கடிதங்களும் ஒன்றிரண்டு வருவதுண்டு. விலாசமில்லாத அவை குப்பைத் தொட்டியை அடையும். விலாசங்கொடுத்து எழுதியிருக்கும் தங்களைச் சில கேள்விகள் கேட்பதன்மூலம் எனது நிலையை விளக்க முயல்கின்றேன். வசைமொழிகளைப் பொழியாமல், நேரில் வந்து நட்புறவோடு இக்கேள்விகளுக்கு பதில் கூறமுடியுமானால், தங்களைப் வரவேற்கிறேன். கேள்விகள்:—(1) இன்று (28-11-80) தனித்தபாலில் ஸுதர்சனர் பதில் மூன்று சதகங்களையும் அனுப்பியிருக்கிறேன். இவற்றில் 300 கேள்விகளுக்கு மேல் ஸுதர்சனரின் பதில்கள் உள்ளன. இவற்றில் எங்கெந்த பதில்கள் குறுகிய கிணற்றுத்தவளை மனப்பான்மையையும் மதவெறியையும் காட்டுகின்றன? (2) வலிமைபெற்ற பொது ஜனப் பத்திரிகைகளிலும், அவற்றில் அடிக்கடி பாராட்டப் பெறும் காமமோடிபீடாதிபதிகள், கண்ணதாசன், நா. மகாலிங்கம், வாரியார் போன்ற லௌகிக வைதிகப் பிரமுகர்களின் கட்டுரைகளிலும், பேச்சுக்களிலும் உள்ள விஷயங்களே ஸுதர்சனர் பதிலில் பெரும்பாலும் விமர்சிக்கப்பட்டுள்ளன. அவ்விஷயங்களில் குறுகியமனப்பான்மையும், மதவெறியும், பொய்ம்மையுமே நிறைந்திருக்கின்றன என்பதையும், அவற்றுக்கு பதில்சொல்லுவதாலேயே ஸுதர்சனர் பதில்கள் தங்களைப்போன்றவர்களுக்குக் கசப்பாயிருக்கின்றன என்னும் உண்மையையும் தங்களால் மறுக்கமுடியுமா? (3) லக்ஷக்கணக்கானவர்கள் படிக்கும் பத்திரிகைகளில் விஷ்ணுவையும், வைஷ்ணவத்தையும் தாக்கியும், இழிவுபடுத்தியும் வெளிவரும் கட்டுரைகள் ஆத்திகத்தை அழிக்கும் ஐந்தாம்படை வேலையைச் செய்கின்றனவா? ஆயிரக்கணக்கானவர்களிடமே (பெரும்பாலும் வைஷ்ணவர்களிடமே) பிரசாரமுள்ள ஸுதர்சனம் அவைபற்றிக் கேள்வி கேட்கும் வைஷ்ணவர்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்துவதற்காக அவற்றுக்கு பதிலுரைப்பது ஆத்திகத்தை அழிக்கும் ஐந்தாம்படை வேலையா? (4) ஐப்பசி மாதத் தலையங்கத்தில்—ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஒருவர் சங்கரரது நூல்களையோ, ராமாநுஜர் முதலிய வைஷ்ணவாசார்யர்களது நூல்களையோ படிக்காமல் வைஷ்ணவாசார்யர்களைத் தாக்கி

ராமகிருஷ்ணவிஜயத்தில் எழுதியிருந்தது விமர்சிக்கப்பட்டிருந்தது. இதைக் கண்டபின்பு ராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்தவர்கள் இதிலுள்ள நியாயத்தை உணர்ந்து வாளாவிருக்கின்றனர். தாங்கள் இதில் காணும் தவறு என்ன ? வசவுமாரிபொழியாமல், நேரில் வந்தோ, சுருக்கமாகக் கடிதம் மூலமாகவோ இக்கேள்விகளுக்குத் தங்களால் பதிலெழுத இயலுமானால், செய்யவும்.

R. பார்த்தசாரதி. சென்னை-80.

66. 27-10-80 ஹிந்து பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் அச்சிடப்பெற்றுள்ள ஸ்ரீ S. R. தேமொழியாரது பெரியபுராண உரையில் "(சிவமதத்தில்) பக்தன் எந்த தெய்வத்தை வேண்டுமானாலும் வழிபடலாம். ஆனால் மற்ற மதங்களின் மேல் துவேஷம் கூடாது. தேவாரம், திருவாசகம் எழுதிய நாலு நாயன்மார்களும் வைஷ்ணவத்தைத் தங்கள் பாடல்களில் புகழ்ந்திருக்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார். இது சரியா ?

இது பச்சைப் பொய். நாயன்மார்கள் நால்வரும் "பரம்பொருளான சிவனைத் தொழுதால்தான் முக்தி கிட்டும். மற்ற தெய்வங்களைத் தொழுதால் அற்பமாய், நிலைநில்லாத பலன்களையே பெறலாம்" என்றே தங்கள் பாடல்களில் கூறியிருக்கிறார்கள்; பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், வடமொழி இலக்கியங்களிலும் காணப்படாத அடிமுடி தேடிய கதை, கண்ணைப் பிடுங்கி அர்ச்சனை செய்த கதை, விஷ்ணுவின் அவதாரங்களைக் கொன்ற கதைகள் முதலான கதைகளைச் சொல்லி விஷ்ணுவையும் வைஷ்ணவத்தையும் ஏராளமான பாடல்களில் தாழ்த்திக் கூறியிருக்கிறார்கள். ஞானசம்பந்தர் தமது ஒவ்வொரு பதிகத்திலும் ஒருபாடலில் விஷ்ணுவைத் தாழ்த்துவதையும், மற்றொரு பாடலில் ராவணனைப் புகழ்வதையும் நியமமாகக் கொண்டிருக்கிறார். ஆகையால் தேமொழியார் கூறுவது—சொற்பொழிவைக் கேட்பவர்களைத் திருப்தி செய்வதற்காகச் சொல்லப்பட்ட பொய்மொழியேயாகும்.

கூரம் ஸ்ரீவத்ஸ கே. வரதராஜன் (67—71 கேள்விகள்) சென்னை-9.

67. எம்பெருமானை "பெருமாள்" என்பதன் பொருள் என்ன?

பெருமான் என்பதே பெருமாள் என்று பூர்வாசார்யர்கள் காலத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களிடையே மருவி வழங்கிவரு

கிறது. இப்பதத்தை அருணகிரிநாதரும் தமது நூல்களில் முருகனைக் குறித்து வழங்கியிருக்கிருர். குணங்களில் சிறந்தவன் என்பது இதன் பொருள். அதனுலேயே குணங்களில் தலைசிறந்தவனை ஸ்ரீராமபிரானைப் பூர்வாசார்யர்கள் 'பெருமாள்' என்றே வழங்கினர். திவ்யதேசத்து எம்பெருமான்களையும் இக்காரணத்தாலேயே வைஷ்ணவவுலகம் பெருமாள் என்று வழங்கிவருகிறது.

68. 'தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் தடிந்த எம் தாசரதி' என்று சக்கரவர்த்தித் திருமகனே சூர்ப்பணகையை தண்டித்ததாக அருளிச்செயல்களில் பிரஸித்தம். இப்படியிருக்க இளையபெருமாள் அறுத்ததாகக் கூறப்படுகிறதே. எது சரி என்பதை விளக்கவேண்டுகிறேன்.

வால்மீகியே ஸ்ரீராமாயணத்தில் சூர்ப்பணகையை மூக்கறுத்தது இளையபெருமாளே என்று கூறியிருக்கிருர். அவரே "ராமஸ்ய த₃க்ஷிணோ பா₃ஹு:" [ரா ஆ 34-13] [லக்ஷ்மணன் ராமனுடைய வலது கையாவான்] என்று இளையபெருமாளை ராமனின் வலதுகையாகக் கூறியிருக்கையால், இராமன் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்ததாக ஆழ்வார்கள் அருளியிருப்பதற்கு "பெருமாள் தமது வலதுகையான இளையபெருமாளைக் கொண்டு சூர்ப்பணகையின் மூக்கை அறுத்தார்" என்று பூர்வாசார்யர்கள் உரையிட்டுள்ளனர். ஆகையால் வால்மீகியின் வாக்குக்கும், ஆழ்வார்களின் அருளிச்செயலுக்கும் விரோத₄மில்லை.

69. "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன் காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன் பேணுங்கால் பேணும் உருவாகுமல்லனுமாம்" என்று திருவாய்மொழி அருளிச்செய்கிறது. இது 'எல்லாம் மாயை' எனும் அத்வைதக் கருத்தாகாதா? விளக்கவேண்டுகிறேன்.

இந்தப் பாசுரப்பொருளை பட்டர் உபந்யஸித்துக்கொண்டிருந்தபோது ஒரு தமிழ்ப்புலவர் "இப்படி ஆழ்வார் சொல்லுகிறபடியால் இந்தத் தத்துவம் சூன்யமோ?" என்று பட்டரைக் கேட்டாராம். அதற்கு பட்டர் "'ஆணல்லன், பெண் அல்லள், அல்லா அலியும் அல்லது' என்றிராமல் 'அல்லன் அல்லன்' என்றே இருக்கையால், இங்கு கூறப்படும் தத்துவம்

உலகில் காணும் ஆண் பெண் அலிகளைக் காட்டிலும் மிகவும் வேறுபட்ட புருஷோத்தமன் என்று உணர்த்தப்பட்டது.'' என்று ஸமாதானம் அருளினராம். ''காணலுமாகான்'' என்றது ''ஆண் பெண் அலிகளைக் காணும் பிரமாணங்களால் காணப் படாதவன்'' என்று பொருள்படுகிறது. 'உளனல்லன் இல்லை யல்லன்' என்றது 'இவனை ஆஶ்ரயிக்காதவர்களுக்கு இல்லாத வனாயிருப்பான்' என்றும், 'ஆஶ்ரயித்தவர்களுக்கு உள்ளவ னாகவேயிருப்பான்' என்றும் பொருள்படுகிறது. 'பேணுங்கால் பேணும் உருவாகும்' என்றது 'அடியார்கள் விரும்பும்போது அவர்கள் விரும்பும் வடிவை உடையவனாவான்' என்று பொருள்படுகிறது. 'அல்லனுமாம்' என்றது 'இப்படி உரு வுடையவனாய் இருந்தபோதிலும் ஶிஶுபாலன் முதலானவர்க ளுக்குக் கிட்ட அரியவனாயிருப்பான்' என்று பொருள்படுகிறது. ஆகையால் தத்துவம் சூன்யம் என்றோ, எல்லாம் மாயை என்றோ இப்பாசுரத்திலிருந்து ஏற்படாது. இக்கொள்கைகளை ஆழ்வார் பல பாசுரங்களில் மறுத்திருக்கிறார். ''கூடிற்றாகில் நல்லுறைப்பு'' [திருவாய் 8-8-9] என்னும் பாசுரத்தில் ஆழ்வார், மாயாவாதிகள் 'ஜீவன் மோக்ஷத்தில் ப்ரஹ்மமாகவே ஆகிறது' என்று கூறுவதை நேரே கண்டித்திருக்கிறார்.

70. ஸ்வாமி தேசிகனுடைய ''வைராக்ய பஞ்சகம்'' என்னும் ஸம்ஸ்கிருத ஸ்தோத்ரத்தைப்பற்றி வித்யாரண்யர் எனும் அத் வைத பண்டிதரை இணைத்து ஒரு சம்பவம் கூறப்படுகிறதே! கிருஷ்ணதேவராயரின் ஆஸ்தான கவியான வித்யாரண்யரும் ஸ்வாமி தேசிகனும் ஒருகாலத்தில் இருந்தவர்களா?

விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த ஹரிஹர புக்கர்க ளுக்கே வித்யாரண்யர் மந்திரியாயிருந்தார் என்பது வரலாறு. பிற்காலத்தில் வந்த கிருஷ்ணதேவராயருக்கல்ல. வித்யாரண்யர் தம்மைப்போலே ராஜசபைக்கு வந்துவிடும்படி ஸ்ரீ வேதாந்த தேசிகருக்கு ஓலை அனுப்பினார் என்றும், 'அரசர்களைத் துதி பாடிப் பொருள் பெறுவதில் தமக்கு விருப்பமில்லை' என்னும் கருத்தையுடைய ஐந்து ஶ்லோகங்கள்கொண்ட வைராக்ய பஞ்சகத்தை தேசிகன் அவருக்கு பதிலாக அனுப்பினார் என்றும் சரித்திரம் கூறுகிறது.

॥भा॥ ननु * नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः। नाशान्तमानसो वाऽपि प्रज्ञानेनैनमाप्नुयात्॥ (क. २. २४) इत्यादिश्रुतेः आचारव्यतिक्रम उत्तरोत्तरभजनोत्पत्तिप्रवाहं निरुणद्धीत्यत्राह—

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति।
कौन्तेय! प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति॥३१॥

31. க்ஷிப்ரம் ப₄வதி த₄ர்மாத்மா ஶஶ்வச்சா₂ந்திம் நிக₃ச்ச₂தி ।
கௌந்தேய! ப்ரதிஜாநீஹி ந மே ப₄க்த: ப்ரணஶ்யதி ॥

(என் விஷயமான ஸ்வயம் ப்ரயோஜன ப₄க்தியைச் செய்பவன் து₃ராசாரம் உள்ளவனுயினும்) **க்ஷிப்ரம்**—விரைவிலேயே, **த₄ர்மாத்மா ப₄வதி**—(தடை நீங்கப்பெற்ற) ப₄க்தியோக₃த்திலேயே ஈடுபட்ட நெஞ்சுடையவனுகிருன். **ஶஶ்வச்சா₂ந்திம்** — நிலையான து₃ராசாரநிவ்ருத்தியை, **நிக₃ச்ச₂தி** — நன்கு அடைகிருன். **கௌந்தேய!** — குந்தீ புத்ரனே!, "**மே ப₄க்த:** — (ஸர்வேஶ்வரனுகிற) என்னுடைய ப₄க்தன், **ந ப்ரணஶ்யதி**—அழியமாட்டான்" (என்னும் இந்த அர்த்த₂த்தை) **ப்ரதிஜாநீஹி**—(நீயே) ப்ரதிஜ்ஞை செய்வாய்.

---

31. ஒல்லை யவன்றருமத் துற்ற வொருவனு
மல்லலிவினைச் சாந்திதனை மன்னுமே—யெல்லையில்சீர்க்
கௌந்தேயா வாங்கிதனைக் கட்டறுநீ யென்பத்தன்
போந்தே நசியான் புறத்து.

அவன்—என் விஷயமான ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியைச் செய்பவன் (து₃ராசாரமுடையவனுயினும்) **ஒல்லை**—விரைவிலேயே, **தருமத்து உற்ற ஒருவனும்**—(தடைநீங்கப் பெற்ற) ப₄க்தியோக₃த்திலேயே ஈடுபட்ட நெஞ்சையுடையவனுகிருன். **அல்லலிவினை சாந்திதனை மன்னுமே**—து₃ராசார நிவ்ருத்தியை நிலையாக அடைவான். **எல்லையில்சீர் கௌந்தேயா!** — கணக்கற்ற கு₃ணங்களையுடைய குந்தீ

॥भा॥ मत्प्रियत्वकारितानन्यप्रयोजनमद्भजनेन विधूतपापतयैव समूलोन्मूलितरजस्तमोगुणः क्षिप्रं धर्मात्मा भवति—क्षिप्रमेव विरोधि-

---

புத்ரனே!, 'என் பத்தன்—என்னுடைய ப4க்தன், புறத்துப் போந்தே—ஸதா3சாரத்திற்குப் புறம்பாக நடப்பவனாயினும், நசியான்—அழிந்துவிடமாட்டான்'' ஆங்கு இதனை—என்னும் இந்த அர்த்த2த்தை, நீ கட்டறு—நீ ப்ரதிஜ்ஞை செய்வாயாக.

---

31. முன் ஶ்லோகத்தில் ''மிகவும் து3ராசாரமுடையவனாயினும், எனது ப4க்தன் அனைவராலும் கொண்டாடத் தக்கவனே'' என்று கூறினான். இதற்குமேல் ''மற்றவர்களால் கொண்டாடத் தக்கவனாயிருந்தாலும் 'நாவிரதோ து3ஶ்சரிதாத் நாஶாந்தோ நாஸமாஹித: । நாஶாந்தமாநஸோ வாऽபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத் ॥' [கடோ2பநிஷத் 2-24] [து3ராசாரத்திலிருந்து நீங்காதவனாய், காமக்ரோத4வேக3ம் நீங்கப் பெறாதவனாய், (பரமாத்ம விஷயத்தில்) ஒருமுகப்படுத்தப்படாததும், (வெளிவிஷயங்களில் பாயாமல்) கட்டுப்படுத்தப்படாததுமான நெஞ்சை உடையவன் இந்தப் பரமாத்மாவை ஞானத்தின் மூலம் அடையமுடியாது.] என்று து3ராசாரம் ஜ்ஞானம் உண்டாவதையே தடுத்துவிடும் என்று வேத3ம் ஓதுகையாலும், 'பாபம் ப்ரஜ்ஞாம் நாஶயதி க்ரியமாணம் புந: புந: । நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரப4தே த்3விஜ ॥' [பா4ரதம் உத் 35-73] [பாபம் மறுபடிமறுபடி செய்யப்பட்டதாகில் அறிவை அழிக்கிறது. அந்தணரே! அறிவழிந்தவன் மறுபடியும் பாபத்தையே தொடங்குகிறான்] என்று ஸ்ம்ருதியும் இதை வலியுறுத்துகையாலும் அவனுடைய து3ராசாரம் மேலும் மேலும் ப4க்தி உண்டாகி வளர்வதைத் தடுத்துவிடுமே. ஆகையால் இவன் விரும்பிய ப2லனாகிற ப4க3வத்ப்ராப்தியை அடைய முடியாதே'' என்னும் கேள்வியெழ, அதற்கு பதில் கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில். (க்ஷிப்ரம் ப4வதி த4ர்மாத்மா) முன் ஶ்லோகத்தில் சொன்னபடி என்னிடம் ஈடுபட்டு ஸ்வயம்ப்ரயோஜந ப4க்தியைச் செய்வதால் பாபம் நீங்கப்பெற்று, ரஜஸ்தமோ கு3ணங்கள் அடியோடு அழியப்பெற்று, விரைவிலேயே தடை நீங்கப்பெற்ற அங்க3ங்களோடு கூடிய ப4க்தியோக3த்தில் ஈடுபட்ட நெஞ்சையுடையவனாகிறான். (க்ஷிப்ரம்) ஆசாரக் குறைபாடு இவனுடைய ப4க்தி நிறைவடைவதற்குத் தாமதத்தை ஏற்படுத்தமுடியாது என்று கருத்து. (த4ர்மாத்மா ப4வதி) ''த4ர்மஸ்யாஸ்ய பரந்தப!'' [கீ3தை 9-3] என்று இந்த அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே த4ர்மஶப்3த3ம்

रहितसपरिकरमद्भजनैकमना भवति। एवंरूपभजनमेव हि * धर्मस्यास्य परन्तप (३) इत्युपक्रमे धर्मशब्दोदितम्। शश्वच्छान्तिं निगच्छति—शाश्वतीं-अपुनरावर्तिनीं मत्प्राप्तिविरोध्याचारनिवृत्तिं गच்छति। कौन्तेय!

ப₄க்தியைக் குறித்துப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. முன்பின் ஸ்லோகங்களிலும் ப₄க்தியைப் பற்றிய பேச்சே அடிக்கடி வந்துள்ளது. ஆகையால் இங்கும் 'த₄ர்மஸப்₃த₃ம்' ப₄க்தியைக் குறிப்பதே உசிதம். வர்ணாஸ்ரமத₄ர்மம் முதலானவற்றைக் குறிப்பதாகக் கொள்வது இந்த ப்ரகரணத்திற்குப் பொருந்தாது. ஆத்மஸப்₃த₃மும் இங்கு நெஞ்சைக் குறிக்கிறது. ''அநந்யமாநஸ:'' [கீ₃தை 9-13] ''மந்மநா ப₄வ'' [கீதை 9-34] என்று முன்பின் ஸ்லோகங்களில் ப₄க்தியுடைய நெஞ்சைப் பற்றிப் பேசியிருப்பதால் இதுவே பொருந்தும். 'ப₄க்தி உண்டாகி வளர்வதற்குத் தடையை எப்படி ப₄க்தியே நீக்கும்?' எனில்: ப₄க்தியின் தொடக்கநிலை ப₄க்தி மேலும் வளர்வதற்குத் தடையான பாபங்களை நீக்குவதன் மூலம் பரிபூர்ண ப₄க்தியை விளைக்கிறதாகையாலே குறையில்லை. ''ப₄க்தியின் பெருமையாலே பாபங்கள் நீங்குகின்றன என்பது சரி; அநுதாபம் இல்லாமல் பு₃த்₃தி₄பூர்வகமாகத் தொடரும் து₃ராசாரங்கள் ப₄க்தியை எப்படித் தடுக்காமலிருக்கும்?'' எனில்: (ஸஶ்வச்சா₂ந்திம் நிக₃ச்ச₂தி) என்னை அடைவதற்குத் தடையாயிருக்கும் து₃ராசாரங்கள் என்றும் மறுபடி திரும்பி வராதபடி நீங்கப்பெறுகிறான். ப₄க்தியின் ப்ரப₄ாவத்தாலே து₃ராசாரங்களும் விரைவில் அடியோடு நீங்கிவிடும் என்று கருத்து. (கௌந்தேய! ப்ரதிஜாநீஹி) குந்தீபுத்திரனே! நீயே பின் வரும் விஷயத்தைக்குறித்துப் பிரதிஜ்ஞைசெய். எவ்விஷயம்? எனில்: (ந மே ப₄க்த: ப்ரணஶ்யதி) ஸர்வேஸ்வரனாகிற என்னிடம் ப₄க்திசெய்யத் தொடங்கியவன் அதற்குத்தடையான ஆசாரமுடையவனாயினும் அழியமாட்டான் என்னும் விஷயத்தை நீயே ப்ரதிஜ்ஞை செய் என்றபடி. ''என் ப₄க்தன் அழியமாட்டான் என்று நீ அறிந்துகொள்'' என்று ஜ்ஞானமாத்ரத்தை விதி₄ப்பதாயிருந்தால் ''ஜாநீஹி'' என்பதே போதும்; 'ப்ரதி' என்னும் உபஸர்க்க₃ம் தேவையில்லை; ''வாஸ்தோஷ்பதே! ப்ரதிஜாநீஹ்யஸ்மாந்'' [யஜு 3-4-10-36] [வாஸ்தோஷ்பதியே! எங்களை அறிவாயாக] முதலானவிடங்களில் வேறு வழியில்லாமையாலே ''அறிவாய்'' என்றே பொருள்கொள்கிறோம். விஷயத்தைச் சொன்னாலே தெரிந்துகொள்ளக்கூடிய அர்ஜுனனுக்கு 'அறிந்துகொள்' என்று விதி₄ப்பது பயனற்றதுமாகும். வெளிப்படையாக விளங்கும் ''ப்ரதிஜ்ஞை செய்'' என்னும் பொருள்—இவ்விஷ

त्वमेवास्मिन्नर्थे प्रतिज्ञां कुरु—मद्भक्तावुपक्रान्तो विरोध्याचारमिश्रोऽपि न नश्यति; अपि तु मद्भक्तिमाहात्म्येन सर्वं विरोधिजातं नाशयित्वा शाश्वतीं विरोधिनिवृत्तिमधिगम्य क्षिप्रं परिपूर्णभक्तिर्भवतीति ॥ ३१ ॥

யம் அசைக்கமுடியாதபடி அறுதியிடப்பட்டது எனக்காட்டுகையால் இவ்விடத்தில் தேவையானதுமாகும். ஆகையால் 'ப்ரதிஜ்ஞை செய்' என்றே பொருள்கொள்ளப்பட்டது. தான் ப்ரதிஜ்ஞை செய்யாமல், ''நீயே ப்ரதிஜ்ஞை செய்'' என்றது—''நான் சொல்லுவதை நீ உறுதியாகக்கொண்டு, உனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் ப்ரதிஜ்ஞைசெய்து வெளிப்படுத்து'' என்று கூறுவதன்மூலம் இவ்வர்த்த2ம் மிகவும் உறுதியானது எனக்காட்டுகிறது; மேலும், '' 'கண்ணனை ஆயுத4மெடுக்கவைப்பேன்' என்று என் அடியானான பீ4ஷ்மன் சொன்ன வார்த்தையை மெய்யாக்குவதற்காக, 'ஆயுத4மெடுக்கமாட்டேன்' என்னும் என் வார்த்தையை இந்த பா4ரதப் போரிலேயே பொய்யாக்கிக்கொள்ளப்போகிறவன் நான்; ஆகையால், நான் ப்ரதிஜ்ஞை செய்தால் 'பொய்யாகக் கூடியதோ ?' என்றும் பலர் ஐயமுறலாம்; இந்த ஐயம் ஏற்படாமலிருப்பதற்காக என்பக்தனான நீயே இவ்வர்த்த2த்தை ப்ரதிஜ்ஞைசெய்'' என்னும் கருத்தையும் உணர்த்துகிறது. ''கௌந்தேய !'' என்னும் விளி ''நீ பரமஞானமுடையவளாய், என் அத்தையுமான குந்தியின் பிள்ளையாகையாலும் நீ ப்ரதிஜ்ஞை செய்ததை நான் பொய்யாகவிடமாட்டேன்'' என்னும் கருத்தைக் காட்டுகிறது. (மே ப4க்த: ந ப்ரணஶ்யதி) என் ப4க்தியைத் தொடங்கியவன், அதற்குத் தடையான ஆசாரத்தோடு கூடியவனாயினும் அழியமாட்டான், து3ராசாரமுடையவனாய். ப4க்தியைத் தொடங்கியவனைப் பற்றியே முன் ஶ்லோகத்தில் ''அபி சேத் ஸுது3ராசார:'' என்று பேசப்படுகிறதாகையாலும், ப4க்தி நிறைவடைந்தவனுக்கு அழிவு ஏற்பட இடமில்லாமையாலும் இங்கு ப4க்தன் என்பது ப4க்தியைத் தொடங்கியவனைக் காட்டுகிறது. ப4க்தியைத் தொடங்கியவனையும் 'ப4க்தன்' என்றழைக்கத் தட்டில்லையன்றோ. (ந ப்ரணஶ்யதி) அழிவதில்லை; இங்கு 'ஶரீரம் அழிவதில்லை' என்று கொள்வது அஸம்ப4ாவிதம்; 'ஆத்மா அழிவதில்லை' என்று கூறுவதும் இப்ரகரணத்திற்குத் தேவையில்லை. ஆகையால், ''முற்பாதியில் கூறப்பட்டபடி தடைகள் அழியப்பெறுகிறானாகையால், ப4க்தி நிறைவடையாமையாகிற அழிவு இவனுக்கு ஏற்படுவதில்லை'' என்றே இதற்குக் கருத்துரைக்கவேண்டும். ''என்னிடம் அவன் செய்யும் ப4க்தியின் பெருமையாலே, து3ராசாரம் முதலான தடைகள் அனைத்தையும்

அழித்து, தடைகள் மறுபடியும் திரும்பிவராதபடி நீங்கப்பெற்று விரைவிலேயே பக்தி நிறைவடையப்பெறுவான்'' என்று சொல்லிற்றாயிற்று. துராசாரமுடையவனாயினும் பக்தன் பக்திகாரணமாகவே அந்தத் தீயவொழுக்கம் நீங்கப்பெற்று பக்திபூர்த்தியைப் பெற்று உயர்கதியடைவான் என்னும் விஷயத்தைப் பின்வரும் இதிஹாஸ புராணவ்ருத்தாந்தங்கள் விளக்குகின்றன:— (1) மஹாபாரதம்-சாந்திபர்வம் (மோக்ஷதர்மம்) 345ம் அத்தியாயத்தில் கூறப்பட்ட உபரிசரவஸுவ்ருத்தாந்தம்:— கிருதயுகத்தில் பாஞ்சராத்ரதர்மத்தை அநுஷ்டிக்கும் பரமபாகவதனான ஓரரசன் பக்தி மஹிமையினால் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் வல்லமைபெற்றிருந்தமையால் உபரிசரவஸு எனப் பெயர்பெற்றிருந்தான். ஒரு சமயம் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் யாகம் செய்துகொண்டிருந்தபோது விவாதம் ஏற்பட்டது. 'க்ருதயுகத்தில் பிஷ்டபசு (மாவினால் செய்யப்பட்ட ஆடு) கொண்டே யாகம் செய்யவேண்டும்' என்னும் உண்மையைக் கூறினர் ருஷிகள்; மாம்ஸத்தில் ஆசையாலே '' உயிரோடுள்ள ஆட்டைக்கொண்டே யாகம்செய்யவேண்டும் '' என்றனர் தேவர்கள்; இவ்விவாதத்தில் இருதரப்பினரும் உபரிசரவஸுவை மத்யஸ்தனாகவைத்து நியாயம் கேட்டனர். உபரிசரவஸு தேவர்களிடம் பக்ஷபாதத்தால் 'உயிருள்ள ஆட்டைக்கொண்டே யாகம் செய்யவேண்டும்' என்று பொய் சொல்லிவிட்டான். 'இப்படிப் பொய் சொன்னதால் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் வல்லமை நீங்கி பூமியில் மஹாத்வாரமொன்றில் விழுவாய்' என்று ரிஷிகளால் சபிக்கப்பெற்று அப்படியே விழுந்துவிட்டான். அதற்குப்பின் அவனது விஷ்ணுபக்தி மஹிமையினால் விரைவிலேயே எம்பெருமான் கருடனை அனுப்பி அவனைக்கொண்டு வஸுவை பூமித்வாரத்திலிருந்து தூக்கி ஆகாயத்தில் மறுபடி ஸஞ்சரிக்குமவனாக்கினான் என்னும் வரலாறு. (2) '' உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத் '' [வி-பு 1-15-146] [எல்லா நல்லோர்களுக்கும் எப்போதும் உபமானமானான் ப்ரஹ்லாதன்] எனப் புகழ்பெற்ற ப்ரஹ்லாதனும் திரிவிக்கிரமன் மாவலியை வஞ்சித்து உலகளந்தபோது அவனோடு போர் புரிந்து, விரைவிலேயே அந்த பகவதபசாரத்திலிருந்து நீங்கப் பெற்றான் என்றும் புராணக்கதை. (3) பரமபாபியான க்ஷத்ரபந்து எம்பெருமானுடைய கோவிந்த நாமஸங்கீர்த்தன ப்ரபாவத்தால் மறுஜன்மத்தில் பூர்வஜன்மஸ்மரணம் ஏற்பட்டு, அதனால் வைராக்யம் விளைந்து எம்பெருமானை சரணமடைந்து முக்திபெற்றான் என்று விஷ்ணுதர்மத்தில் விளக்கப்பெற்ற கதை. இது '' மொய்த்தவல்

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम्॥ ३२॥
किं पुनर्ब्राह्मणाः पुण्या भक्ता राजर्षयस्तथा।
अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम्॥ ३३॥

32. மாம் ஹி பார்த்த₂! வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய: ।
ஸ்த்ரியோ வைஶ்யாஸ்தத₂ா ஶூத்₃ரா: தேऽபி
யாந்தி பராங்க₃திம் ॥

33. கிம் புநர் ப்₃ராஹ்மணா: புண்யா ப₄க்தா ராஜர்ஷயஸ்தத₂ா ।
அநித்யமஸுக₂ம் லோகமிமம் ப்ராப்ய ப₄ஜஸ்வ மாம் ॥

பார்த்த₂ — குந்தீபுத்திரனே! **ஸ்த்ரிய:** — ஸ்த்ரீகளும், **வைஶ்யா:**—வைஶ்யர்களும், **தத₂ா ஶூத்₃ரா:** — அவ்வண்ணமே ஶூத்₃ரர்களுமான, **பாபயோநய: யே அபி ஸ்யு:**—பாபத்தினுல் தாழ்ந்த பிறப்பை எவர்கள் எடுத்திருக்கிருர்களோ, **தே அபி**—அவர்களும், **மாம்**—என்னை, **வ்யபாஶ்ரித்ய**—சிறப்பாக ஆஶ்ரயித்து, **பராம் க₃திம்**—மேலான க₃தியை, **யாந்தி ஹி**—அடைகிருர்களன்ருே. **புண்யா:**—புண்யம் செய்து சிறந்த பிறப்பெடுத்தவர்களான, **ப்₃ராஹ்மணா:**—அந்தணர்களும், **ராஜர்ஷய: தத₂ா**—ராஜரிஷிகளும், **ப₄க்தா:**—எனனிடம் ப₄க்தி செய்தார்களாகில் (மோக்ஷமடைவார்கள் என்பதை) **கிம்புந:**—சொல்லவும் வேண்டுமோ? (ஆகையால்) **அநித்யம்** — நிலையல்லாததாய், **அஸுக₂ம்**—துன்பம் நிறைந்ததான, **இமம் லோகம்**—இவ்வுலகை, **ப்ராப்ய** — அடைந்திருப்பவனுகையாலே, **மாம் ப₄ஜஸ்வ**—என்னிடம் ப₄க்தி செய்வாயாக.

வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால் கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டு கொண்டான்'' [திருமாலை 4] என்னும் பாசுரத்தின் வியாக்கியானத்தில் விரிவாக எடுக்கப்பட்டுள்ளது. ஆக, இம்மூன்று (29,30,31) ஶ்லோகங்களால் ஜாதி, ஆகாரம், ஸ்வபாவம், ஞானம், ஒழுக்கம் ஆகியவற்ருல் உயர்ந்தாரோடு தாழ்ந்தாரோடு வாசியற அனைவரும் தன்னை ஆஶ்ரயித்து மோக்ஷஸித்₃தி₄ பெறலாம் என நிருபித்தானுயிற்று. 31.

32. பார்த்தவெனைப் பற்றினுற் பாவம் பயில்பிறவிச்
சோர்த்தபெண் வைச்சியருஞ் சூத்திரரும்—பேர்த்து
வினையடையார் வீடெய்தி மேற்கதியா மின்பந்
தனையடைவர் சென்று தழைத்து.

33. ஆனுத புண்ணியத்த ரன்பரா மந்தணர்கள்
ஞானு திகவரசர் நண்ணெளிது—தானுமால்
மாயுமித் துன்புலகை மன்னியநீ யென்னையடைந்
தாயுமித் தன்மையறி யாங்கு.

பார்த்த-குந்தீபுத்திரனே! **பாவம் பயில் பிறவி சோர்த்த**-பாவத்தினுல் ஏற்பட்ட பிறப்பையடைந்து சோர்வுற்ற, **பெண்**—ஸ்த்ரீகளும், **வைச்சியரும்**—வைஶ்யர்களும், **சூத்திரரும்**—ஶூத்₃ரர்களும், **எனை**—என்னை, **பற்றினுல்**—ஆஶ்ரயித்தால், **பேர்த்து**—மறுபடியும், **வினை அடையார்**—பாபத்தையும், அதுகாரணமாக ஏற்படும் ஸம்ஸாரத்தையும் அடையாமல், **சென்று**—(அப்ராக்ருத லோகத்திற்குச்) சென்று, **தழைத்து**—சிறப்புற்று, **வீடு எய்தி**—மோக்ஷத்தை அடைந்து, **மேற்கதியாம் இன்பம் தனை**—பரமாத்மாநுப₄வமாகிற பேரின்பத்தை, **அடைவர்**—அடைவார்கள். **ஆனுத புண்ணியத்தர்**—அழியாத புண்ணியம் செய்து சிறந்த பிறப்பெடுத்தவர்களாய், **அன்பராம்**—என்னிடம் ப₄க்தியையும் செய்யும், **அந்தணர்கள்**—பிராம்மணர்களும், **ஞானுதிக அரசர்**—அறிவிற் சிறந்த அரசர்களான ராஜரிஷிகளும், **நண்ணெளிது தானுமால்**—என்னை அடைவது மிக எளிதன்றோ; **மாயும்** — நிலைநில்லாததாய், **இத்துன்புலகை**—துன்பமயமான இவ்வுலகை, **மன்னிய நீ**—அநாதி₃காலமாகச் சேர்ந்திருக்கும் நீ, **ஆங்கு**—மோக்ஷத்தின் பொருட்டு, **என்னை அடைந்து ஆயும் இத்தன்மை**—என்னை ஆஶ்ரயித்து ப₄க்தி செய்வதாகிற இத்தன்மையை, **அறி**—அறிவாயாக.

32,33. ''அபி சேத் ஸு₂து₃ராசார:'' என்னும் ஶ்லோகத்தில்—பிறவியெடுத்தபின் பாபபலமாகத் தீயவொழுக்கமுடையவனை வனைப் பற்றிச் சொல்லப்பட்டது. அடுத்த ஶ்லோகத்தில் அவன்

॥ भा ॥ स्त्रियो वैश्याश्शूद्राश्च पापयोनयोऽपि मां व्यपाश्रित्य परां गतिं यान्ति; किं पुनः पुण्ययोनयो ब्राह्मणा राजर्षयश्च मद्भक्तिमास्थिताः।

விரைவிலேயே பக்திவைபவத்தால் நல்லொழுக்கமுடையவனுகிவிடுவான் என்று சொல்லப்பட்டது. இவ்விரு ஶ்லோகங்களிலும்—முன் பிறப்புக்களில் மிகுந்த பாபம் செய்து, அதனுல் தாழ்ந்த பிறப்பையெடுத்திருப்பவர்களும் என்னை ஆஶ்ரயிப்பதாலேயே முற்கூறிய தலைசிறந்த மோக்ஷமாகிற பலனை அடைவார்கள் எனக்கூறி, இப்படியிருக்கும்போது புண்ணியமான பிறப்பையெடுத்தவர்கள் பூர்ணபக்தி செய்தார்களாகில் தலைசிறந்த பலனைப் பெறுவார்கள் என்பது சொல்லாமலே விளங்கும் என விளக்கி, பிறப்பு ஒழுக்கம் முதலானவற்றுல் தலைசிறந்து விளங்கும் நீ பலனில் ஐயமற்றவனுய் என்னிடம் பக்தி செய்வாயாக என்கிருன். (ஸ்த்ரியோ வைஶ்யா: தத்ா ஶூத்ரா: யே பாபயோநயோऽபி ஸ்யு:) முற்பிறவியில் செய்த பாபம் காரணமாக, வேதத்தில் முழுவதுமோ ஓரளவுக்கோ அதிகாரமில்லாத ஸ்த்ரீகள், வைஶ்யர்கள், ஶூத்ரர்கள் ஆகிய தாழ்ந்த பிறவிகளை எடுத்திருப்பவர்களும். ஸ்த்ரீ ஶூத்ரர்களுக்கு வேதம் முழுவதிலும், அதில் விதிக்கப்பட்ட பக்தி யோகத்திலும் அதிகாரமில்லை; முதல் மூன்று வர்ணங்களில் ஒன்றில் பிறந்தவனுகையாலே வேதத்திலும், பக்தியோகத்திலும் அதிகாரமுள்ளவனுயினும், ஸத்ரயாகத்தில் வைஶ்யனுக்கு அதிகாரமில்லையாகையாலே, அவனும் ஓரளவுக்குத் தாழ்ந்தவனுகையால் பாபயோனிகளோடு கூடப் படிக்கப்படுகிருன். ருத்விக்குகளுக்கே ஸத்ரயாகம் செய்ய அதிகாரமுண்டு; ப்ராஹ்மணர்களே ருத்விக்குகளாயிருக்கமுடியும்; "தஸ்மாத்வாஜபேயயாஜீ ஆர்த்விஜீந:" [யஜு 1-3-2-14] என்னும் வேதவாக்யத்தில் க்ஷத்ரியனுக்கும் ஸத்ரயாகத்தில் அதிகாரம் உண்டென்று கூறப்பட்டதாகையால் ப்ராஹ்மண க்ஷத்ரியர்களுக்கே ஸத்ரயாகத்தில் அதிகாரமுண்டு என்பது இங்கு குறிக்கொள்ளத்தக்கது. (மாம் வ்யபாஶ்ரித்ய) என்னைச் சிறப்பாக ஆஶ்ரயித்து; பக்தியோகம் செய்ய அதிகாரமுள்ள வைஶ்யர்கள் அதைச் செய்வதன்மூலமும், அனைவருமே ஸ்வயம் ப்ரயோஜன பக்தியில் ஈடுபட்டு எம்பெருமானையே உபாயமாக உறுதிகொள்வதாகிற ப்ரபத்தியின் மூலமும் ஆஶ்ரயிப்பது இங்கு சிறப்பாக ஆஶ்ரயிப்பது எனப்படுகிறது. (தேऽபி பராம் கதிம் யாந்தி) அவர்களும் மேலான மோக்ஷத்தை அடைவார்கள். "கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டு கொண்டான்" [திருமாலை 4] என்ருர் தொண்டரடிப்பொடிகளும்.

१६. इत्येवं प्रार्थयंस्तत्र कूरेशः सुखमास्थितः।
तदा गोष्ठीपुरे तस्य गोष्ठीपूर्णस्य तिष्ठतः॥

१७. वत्सराणां सुखेनैव पञ्चोत्तरशतं गतम्।
गोष्ठीपूर्णस्य चरमदशायां वैष्णवोत्तमाः!॥

१८. शिष्याः प्रोचुरिदं वाक्यं गोष्ठीपूर्णं दृढव्रतम्।
किं मन्यसे गुरुश्रेष्ठ! त्वमद्य वद तच्च नः॥

१९. तेषां तद्वचनं श्रुत्वा गोष्ठीपूर्णोऽब्रवीत्स तान्।
चक्रवर्तितनूजस्य पुरा वै कश्चिदण्डजः॥

२०. व्रणमुत्पादयामास हृदि भागवतोत्तमाः!।
प्रपत्तिरपि मास्त्वेवमिति मे वदतोऽनिशम्॥

திருக்கோட்டியூர் நம்பியின் சரமதஸை

16*-*24. அப்போது திருக்கோட்டியூரில் திருக்கோட்டியூர்நம்பி நூற்றைந்து பிராயம் உள்ளவராய் இனிது வாழ்ந்து வந்தார். திருக்கோட்டியூர் நம்பியின் சரமத₃ஸையிலே உறுதியான உபாயாத்₄யவஸாயமுடைய அவரைப்பார்த்து வைஷ்ணவோத்தமர்களான ஶிஷ்யர்கள் "ஆசார்ய ஶ்ரேஷ்ட₂ரே! தேவரீர் திருவுள்ளத்திலே நினைத்திருக்கிற நினைவு என்ன என்பதை எங்களுக்குச் சொல்லவேணும்" என்னும் வார்த்தையைக் கூறினர்கள். அவர்களுடைய அந்த வார்த்தையைக் கேட்ட திருக்கோஷ்டியூர் நம்பி அவர்களைப்பார்த்து "மஹாத்மாக்களான ப₄ாக₃வதோத்தமர்களே! சக்ரவர்த்தித்திருமகன் திருவுள்ளத்தை முன்பொரு சமயம் (விபீ₄ஷணஶரணாக₃தி ப்ரகரணத்தில்) ஓர் பக்ஷி (புரு) புண்படுத்திற்று. 'ஶரணாக₃தி செய்யாவிடினும் (நம் இருப்பிடத்திற்கு வந்தவனையும் புருவைப்போல்) எப்போதும் ரக்ஷிக்கவேண்டியதே' என்று எம்பெருமான் கூறும்போது, அவனுடைய அந்த வார்த்தையை நினைத்து

२१. का चिन्तावर्ततेदानीं निर्भरस्य महात्मकाः! ।
इत्युक्त्वा निर्भरो ध्यायन् यामुनार्यपदाम्बुजम् ॥
२२. जगाम स हरेर्लोकं यत्र मोहो न विद्यते ।
प्रायेण दुःखितास्सर्वे तद्वियोगे गुरुप्रियाः ॥
२३. अभवन् वैष्णवास्तस्य शिष्याः पुत्रादयस्तदा ।
नारायणार्यस्सहसा गोष्ठीपूर्णस्य पुत्रकः ॥
२४. ब्रह्ममेधेन संस्कारं स चकार पितुस्तदा ।
ततः श्रीलक्ष्मणार्येण प्रेषितः स च वैष्णवः ॥
२५. श्रीरङ्गनगरं प्राप्य वृत्तं कूरेश्वरस्य तत् ।
सर्वं विदित्वा विशदमभ्यगात्सुन्दराचलम् ॥

நிர்ப்ப₄ரனுய் இருக்கும் எனக்கு இப்போது வேறொரு நினைவுண்டோ ?'' என்று கூறி, கவலையற்றவராய், ஆளவந்தாரின் திருவடித்தாமரைகளைத் தியானித்துக்கொண்டு மயக்கமற்ற ஸ்ரீவைகுண்ட₂லோகத்திற்குச் சென்றுர். ஆசார்யப₄க்தியுடையவர்களான அவருடைய ஶிஷ்யர்கள், புத்ரபுத்ரிகள் முதலான ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் அவருடைய பிரிவினுலே மிகவும் துன்புற்றனர். திருக்கோட்டியூர்நம்பியின் திருக்குமாரரான (தெற்காழ்வார் என்று பெயர்பெற்ற) நாராயணுசார்யர் தம் தந்தையான நம்பிக்கு ப்₃ரஹ்மமேத₄விதி₄ப்படி ஸம்ஸ்காரங்களைச்செய்தார்.

கூரத்தாழ்வானின் உகப்பு

24*-30. அதற்குப்பின் ஸ்ரீராமாநுஜரால் அனுப்பப்பெற்ற சிறியாண்டான் ஸ்ரீரங்கநகரத்திற்கு வந்து, கூரத்தாழ்வானைப் பற்றிய செய்தியனைத்தையும் தெளிவாக அறிந்து, திருமாலிருஞ்சோலைக்குச் சென்றுர். அங்கு அவர் கருணைக்கடலான கூரத்தாழ்வானைக் கண்டு வணங்கி, யதிராஜரைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் மஹாத்மாவான கூரத்தாழ்வானிடம் ராமாநுஜாசார்யரின் ஆணைப்படி

२६. तत्र कूराधिपं दृष्ट्वा प्रणम्य स दयानिधिम्।
सर्वं यतीशवृत्तान्तं कूरेशाय महात्मने॥

२७. न्यवेदयत्सान्त्वपूर्वं विशदं चाज्ञया गुरोः।
ततः पुनरुवाचेदं कूरेशं स च वैष्णवः॥

२८. पूर्णाचार्यवियोगेन तव नेत्रवियोगतः।
दुःखितो वर्तते चाद्य यादवाद्रौ यतीश्वरः॥

२९. तच्छ्रुत्वा तमुवाचेदं कूरेशो वैष्णवं प्रति।
जगद्गुरुर्लक्ष्मणार्यः सुखं यदि हि वर्तते॥
तदेवालं ममेत्युक्त्वा सन्तुष्टः कूरराडभूत्॥

३०. अनूपमं लक्ष्मणदेशिकस्य निशम्य माहात्म्यमतिप्रहृष्टः।
अपूजयत्तं यतिराजबुद्ध्या श्रीवैष्णवं कूरपतिर्महात्मा॥

इति श्रीप्रपन्नामृते रामानुजचरित्रे कूरेशस्य सुन्दराचलनित्यवासो नाम
पञ्चाशोऽध्यायः॥

தெளிவாகவும், ஆறுதல் வார்த்தைகளோடுகூடவும் விண்ணப்பித்தார். அதற்குப்பின் அவ்வைஷ்ணவர் மறுபடியும் கூரத்தாழ்வானைக் குறித்து "பெரியநம்பியின் பிரிவினாலும் தேவரீர் கண்ணிழந்ததினாலும் யதிராஜர் மிகவும் துன்புற்றவராய் யாத₃வாத்₃ரியில் வாழ்கிறார்" என்று உரைத்தார். அதைக்கேட்ட கூரத்தாழ்வான் அவ்வைஷ்ணவரைப் பார்த்து "ஜக₃த்₃கு₃ர்வாசார்யரான ஸ்ரீராமானுஜர் ஸுக₂மாக வாழ்கிறாராகில் அதுவே அடியேற்குப் போதுமானது" என்று கூறி மிகவுகந்தார். ஸ்ரீராமானுஜாசார்யருடைய ஒப்பற்ற பெருமைகளையெல்லாம் கேட்டு மஹாத்மாவான கூரத்தாழ்வான் அந்த ஸ்ரீவைஷ்ணவரையே யதிராஜராக நினைத்து ஆராதி₄த்தார்.

ஸ்ரீப்ரபந்நாம்ருதத்தில் ராமானுஜசரித்திரத்தில்,
ஆழ்வான் திருமாலிருஞ்சோலையில் நித்யவாஸம் செய்தலாகிற
ஐம்பதாம் அத்தியாயம் நிறைவுற்றது.

एकपञ्चाशोऽध्यायः

१. ततश्चोलमहीपालः पापी लोकस्य कण्टकः।
परिहासेन लिखितं द्रोणमस्ति ततः परम्॥

२. वाक्यं श्रुत्वाऽतिसंक्रुद्धो भूपो भूतोऽरुणेक्षणः।
उत्पाटयित्वा नेत्राणि पूर्णकूरेशयोस्तदा॥

३. विष्णुस्थानानि सर्वाणि चोलदेशस्थितानि च।
नाशयामास दुष्टात्मा रङ्गस्थानं विना ततः॥

४. रङ्गं क्षेत्रं तथा कर्तुमुद्युक्तो दुर्मतिस्तदा।
प्रतस्थे सैनिकैस्सर्वैः सहसा विष्णुकण्टकः॥

ஐம்பத்தோராம் அத்தியாயம்

கோவிந்தராஜர் ப்ரதிஷ்டை

க்ருமிகண்ட₂னின் அதிக்ரமம்

1-3. அதற்குப்பின் (க்ருமிகண்ட₂ன் என்று பெயர் பெறப்போகும்) சோழவரசன் உலகத்திற்கே தீங்கிழைக்கும் பாபியாகையாலே, 'ஶிவத்துக்கு (குறுணிக்கு) மேல் த்₃ரோணம் (பதக்கு) உண்டு' என்று கூரத்தாழ்வானல் பரிஹாஸமாக எழுதப்பட்ட வாக்யத்தைக் கேட்டபின் மிகவும் கோபம்கொண்டு, கண்கள் சிவக்கப்பெற்றவனாய், கூரத்தாழ்வான் பெரியநம்பிகளின் கண்களைப் பறித்த பின்பும், தீயநெஞ்சினனாகையாலே சோழதே₃ஶத்திலுள்ள விஷ்ணு ஆலயங்களில் ஸ்ரீரங்கம் தவிர்ந்த மற்றவை யனைத்திலும் மதில் முதலியவற்றை இடித்து அழித்தான்.

க்ருமிகண்ட₂ன் கழுத்தில் புழு உண்டாகி இறந்தது

4-6. து₃ஷ்டபு₃த்₃தி₄யாய் விஷ்ணுத்₃வேஷியான அவன் அப்போதே ஸ்ரீரங்கத்தையும் அழிக்க நினைத்து, தன் சேனாவீரர்கள் அனைவரோடும் சடக்கெனப் புறப்பட்டான்.

५. मार्गे तत्र च सायाह्ने कश्चिद्ग्रामं समास्थितः।
तद्रात्रौ तस्य कण्ठे तु महद्व्रणमजायत॥

६. क्रिमयो बहवस्तस्मात् अजायन्त व्रणात्तदा।
औदर्यरोगस्तस्यासीत्ताभ्यां स च मृतिं गतः॥

७. ततः श्रीरङ्गनगरात् यादवाद्रिं समागताः।
वरदार्यादयस्सर्वे शिष्यास्ते देशिकप्रियाः॥

८. प्रियाख्यानं यतीन्द्राय शंसितुं तेन सङ्गताः।
कल्याणसरसस्तीरे वसन्तं वैष्णवास्तदा॥

९. ददृशुर्लक्ष्मणाचार्यं कृतजप्यं जगद्गुरुम्।
प्रणम्य यतिराजाय वचनं चेदमब्रुवन्॥

அப்போது வழியில் ஒருநாள் மாலையில் ஒரு கிராமத்தில் தங்கினான். அன்றிரவு அவனது கழுத்தில் பெரிய புண் உண்டாயிற்று. அப்போதே அந்தப் புண்ணிலிருந்து ஏராளமான க்ரிமிகள் (புழுக்கள்) உண்டாயின. வயிற்று வலியும் ஏற்பட்டது. அந்த வயிற்றுவலியாலும், கழுத்துப் புண்ணாலும் (ஸ்ரீரங்கத்தை அடைவதற்கு முன்பே) அவன் இறந்தொழிந்தான்.

யதிராஜரின் ஆநந்தம்

7-18. அதற்குப் பின் ஸ்ரீரங்கநகரிலிருந்து ஆசார்ய பக்தர்களான வரதவிஷ்ணு எனப்படும் நடாதூராழ்வான் முதலான வைஷ்ணவர்களான சிஷ்யர்கள் அனைவரும் திருநாராயணபுரம் வந்து, கல்யாண ஸரஸ்ஸின் கரையில் எழுந்தருளியிருந்த எம்பெருமானாரிடம் இந்த நற்செய்தியைச் சொல்லுவதற்காக அவரோடு கூடினார்கள். ஜகதாசார்யரான ஸ்ரீராமாநுஜர் ஜபம் செய்து முடித்த சமயத்தில் அவரைக் கண்டார்கள். அவரை வணங்கி, அவரிடம் "ஸ்வாமிந்! பெரியநம்பிக்கும், கூரத்தாழ்வானுக்கும்

१०. पूर्णकूरेशयोस्स्वामिन्! अपकर्ता स भूपतिः।
कण्ठव्रणादिरोगेण नीतो वैवस्वतक्षयम्॥

११. तेषां तद्वचनं श्रुत्वा महत्कर्णामृतं तदा।
आनन्दार्णवनिर्मग्नश्चतुर्भुज इवापरः॥

१२. परिरभ्याशु बाहुभ्यां प्रेम्णा तान् वैष्णवोत्तमान्।
आनन्दाश्रुपरीतात्मा लक्ष्मणार्यो जगाद सः॥

१३. बहुदूरादिहागत्य प्रियवृत्तान्तमद्य मे।
वक्तृभ्य इदमार्येभ्यः किं करिष्यामि वः प्रियम्॥

१४. रजतं वा सुवर्णं वा रत्नानि विविधानि वा।
राज्यं वा त्रिषु लोकेषु नैतदर्हति भाषितम्॥

தீங்கு புரிந்த அந்தச் சோழராஜா கழுத்துப்புண் முதலான நோய்களாலே யமனது உலகையடைந்தான்." என்று வார்த்தை சொன்னார்கள். பெரிய கர்ணாம்ருதம்போன்ற அவர்களுடைய அவ்வார்த்தையைக் கேட்டவுடன் ஆனந்தக் கடலில் மூழ்கியவராய், 'நால் தடந்தோளனாகிற மற்றொரு எம்பெருமானோ இவர்?' என்னலாம்படி தோள்கள் பூரிக்கப்பெற்று, அத்தோள்களாலே உடனே அந்த வைஷ்ணவோத்தமர்களை அன்புடன் அணைத்துக்கொண்டு, ஆனந்தக்கண்ணீர் நிறைந்தவராய் அந்த ஸ்ரீராமாநுஜர் பின்வருமாறு கூறினார்—"வெகு தூரத்திலிருந்து இங்கு வந்து, இனிய செய்தியை இன்று எனக்குச் சொன்ன நல்லோர்களான உங்களுக்கு என்ன பரிசு கொடுப்பேன்? வெள்ளியோ, தங்கமோ, பலவகைப்பட்ட ரத்தினங்களோ, மூவுலகங்களிலுமுள்ள ராஜ்யமோ இந்தச் செய்திக்கு இணையாகாதே; அவற்றை இச்செய்திக்குச் சமமாக நான் நினைக்கவில்லையே. வைஷ்ணவோத்தமர்களே! இந்த நற்செய்தியைச் சொன்ன உங்களுக்குக் கொடுக்கத் தகுந்ததான எப்பொருளையும் நான் காணவில்லையே" என்று விதேஹராஜகுமாரியான

१५. नहि पश्यामि तत्साम्यं पृथिव्यां वा नरोत्तमाः।
सदृशं मत्प्रियाख्याने वः प्रदातुं भवेत् क्षमम्॥
१६. तद्रावणवधं श्रुत्वा वैदेही पवनात्मजात्।
हर्षेण महता युक्ता सौहार्दादब्रवीद् यथा॥
१७. तथैवोक्त्वा पुनस्तेभ्यो मन्त्ररत्नं ददौ शुभम्।
ततस्तानाह योगीन्द्रः तत्रत्यान् वैष्णवांस्तदा॥
१८. बभूवान्वर्थनामास्य कल्याणसरसोऽधुना।
ते तथेत्यब्रुवन् सर्वे मुदिता वैष्णवास्तदा॥
१९. ततो गत्वाथ नृहरेः सन्निधौ यमिनां वरः।
बद्धाञ्जलिरुवाचेदं हरये कृतवन्दनः॥
२०. हिरण्यकशिपुं पूर्वं प्रह्लादद्रोहकारिणम्।
तं हत्वा त्वं जगत्सर्वं यथा रक्षितवान् पुरा॥

ஸீதை ராவணன் இறந்தான் என்று அநுமனிடமிருந்து கேட்டவுடன் பேரானந்தம் அடைந்து, அன்பினாலே என்ன வார்த்தைகளைச் சொன்னாளோ அந்த வார்த்தைகளையெல்லாம் யதிராஜர் அவர்களுக்குக் கூறி (அவர்களுக்குக் கைம்மாறாக) மங்களமான த்வயத்தை (அர்த்தத்துடன்) மறுபடியும் உபதேசித்தார். அதற்குப்பின் அப்போது அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களிடம் யதிராஜர் "இந்தக் கல்யாணஸரஸ்ஸின் பெயர் இப்போதே பொருத்தமுள்ளதாயிற்று" என்று கூறினார். பேரானந்தம்கொண்ட அவ் வைஷ்ணவர்களும் அதை 'அவ்வண்ணமே' என்று ஆமோதித்தனர்.

நரசிங்கனின் பேரருள்

19-23. அதற்குப்பின் யதிராஜர் நரசிங்கனின் ஸந்நிதிக்குச் சென்று கைகூப்பி நரசிங்கனை வணங்கி, "எம் பெருமானே! ப்ரஹ்லாதனுக்கு த்ரோஹம்செய்த ஹிரண்ய கசிபுவை முன்னொருகால் கொன்று உலகனைத்தையும்

२१. तथाऽधुना च चोलेन्द्रं भगवन्! विष्णुकण्टकम्।
क्रिमिकण्ठं विधायाशु तं हत्वा चोलमण्डले॥
२२. रङ्गादिदिव्यदेशेषु धर्मं स्थापितवानसि।
एवं विज्ञापितस्तेन नृसिंहो भगवान् हरिः॥
२३. शिष्यसंघसमेताय यतीन्द्राय महात्मने।
सन्तुष्टः प्रददौ तीर्थं शठकोपं च मालिकाम्॥
२४. संप्रेषितस्ततस्तेन हरिणा यतिभूपतिः।
नारायणं नमस्कृत्य संपत्पुत्रं च सादरम्॥
२५. अनुज्ञातस्तदा ताभ்யां श्रीरङ्गगमनोत्सुकः।
तत्र तत्र स्थितान् सर्वान् समानीय यतीश्वरः॥

எப்படி ரக்ஷித்தீரோ அப்படியே விஷ்ணுத்₃வேஷியான சோழராஜாவையும் க்ருமிகண்ட₂னுக ஆக்கி, விரைவில் அவனைக்கொன்று, சோழமண்ட₃லத்திலுள்ள ஸ்ரீரங்க₃ம் முதலான தி₃வ்யதே₃ஶங்களில் அறத்தை நிலைநிறுத்தி னீர்" என்று அருளினர். இப்படி யதிராஜரால் விண் ணப்பிக்கப்பெற்ற நரசிங்கப்பெருமான் ஶிஷ்யர்களோடு கூடிய மஹாபுருஷரான எதிகட்கிறைவரிடம் மிகவுகப் புடையவனாய், தீர்த்த₂ம், ஶட₂கோபம், மாலை ஆகியவற்றை அருளினான்.

திருநாரணனிடமும், ஸ்ரீவைஷ்ணவர்களிடமும் விடைபெறுதல்

24-*30. அந்த நரசிங்கனால் விடைகொடுக்கப்பெற்ற யதிராஜர் திருநாரணனையும், செல்வப்பிள்ளையையும் அன் போடு வணங்கி, அவர்களாலும் அப்போதே விடைகொடுக் கப்பெற்று,ஸ்ரீரங்க₃ம் செல்ல விரும்பியவராய்,அவ்வூரில்ஆங் காங்கு இருந்தவர்களாய், ஜ்ஞானப₄க்திகளை உடைய எல்லா ஸ்ரீவைஷ்ணவ ஶிஷ்யர்களையும் அழைத்து, அவர்களைக் குறித்துப் பின்வரும் மங்க₃ளமான வார்த்தையை அருளினர்-

ஶௌசத்₃த்₄யாசமாநாம் த்ரிவித₄ம் ப்ரகாரம் குர்யாத்த்ரி-
ஸந்த்₄யாஸு ஸமஸ்தகர்மஸு।
ஆரம்ப₄ணம் கேஶவநாமயுக்தம் ஶ்ருதிஸ்ம்ருதிப்₄யாம்
த்₃விவித₄ம் ததே₃ாச்யதே ॥ [2-21]

[எல்லா வைதி₃ககர்மங்களிலும், மூன்று ஸந்த்₄யாகாலங்களிலும் [(1) நீர் பருகுவது, (2) அங்க₃ந்யாஸம் செய்வது, (3) நாமங்களை உச்சரிப்பது என்று] மூன்று வகைப்பட்ட ஶௌசத்₃த₄மான ஆசமனத்தைச் செய்யவேண்டும். ஆசமனத்தின் தொடக்கம் கேஶவ நாமத்தோடு கூடியது. ஶ்ருத்யாசமனம் என்றும், ஸ்ம்ருத்யாசமனம் என்றும் ஆசமனம் இரண்டு வகையாகக் கூறப்படுகிறது.] என்றும்,

புண்யஸ்த்ரீணும் நமோऽந்தம் ஸ்யாத் விஶேஷாத்
கேஶவாதி₃ஷு। [2-26]

[ப₄க₃வந்நாமங்களை, குறிப்பாகக் கேஶவாதி₃ நாமங்களைப் புண்ய ஸ்த்ரீகள் உச்சரிக்கும்போது கடைசியில் நம:பத₃த்தையும் சேர்த்து உச்சரிக்கவேண்டும்.] என்றும்,

கராக்₃ரபஞ்சாங்கு₃லி பூர்ணமுத்₃ரா ஸகேஶவாத்₃யை-
ரநுவர்த்தநீயா। [2-29]

[கையிலுள்ள ஐந்து விரல்களாலும் அங்க₃ந்யாஸம் செய்துகொண்டு கேஶவாதி₃ நாமங்களோடு ஆசமனம் செய்யவேண்டும்.] என்றும் ஆசமனத்தின்போது கேஶவாதி₃ நாமங்கள் விதி₄க்கப்பட்டன.

ஶ்ருத்யாசமநமேபி₄ர்யோ ஹரே: குர்யாத் த்₃விஜோத்தம:।
ஸ ஸர்வபாபமுக்த: ஸ்யாத் ஸ்ப்ருஷ்டாஸ்ப்ருஷ்டிர் ந
வித்₃யதே ॥ [2-38]

[இந்த வேத₃மந்த்ரோச்சாரணங்களையும், அங்க₃ந்யாஸ கரந்யாஸங்களையும் செய்து, எந்த அந்தணர் தலைவன் ஹரியைக்குறித்து ஶ்ருத்யாசமனத்தைச் செய்கிருனே, அவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் நீங்கியவனுகிருன். அவனுக்கு ஸ்பர்ஶதே₃ாஷம் கிடையாது.] என்று ஶ்ருத்யாசமனமும் ஹரியைக்குறித்ததே என்று காட்டப்பட்டது. கா₃யத்ரியின் பெருமையைப் பேசும் ஐந்தாம் அத்தியாயத்தில்,

நாராயணம் மூலமந்த்ரம் ஸம்ஜ்ஞாமந்த்ரம் ப₄வேத் ஸதா₃।
ஓமாபோ ஜ்யோதிரித்யேதத் பத₃மந்த்ரமிதீரிதம் ॥ [5-11]

[நாராயண நாமத்தைக் கொண்ட மூலமந்த்ரமாகிற திருவஷ்டாக்ஷர மந்த்ரம் ஸம்ஜ்ஞா மந்த்ரம் எனப்படுவதாய் எப்போதும் சொல்லத்தக்கது. 'ஓமாபோ ஜ்யோதி:' என்பது பத₃மந்த்ரம் என்று கூறப்படுகிறது.] என்று திருமந்த்ரத்தின் பெருமை பேசப்பட்டது.

ஸ்ரீஸூர்யநாராயணப்ரீத்யர்த்த₂ம் அர்க்₄யப்ரத₃ாநம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய அர்க்₄யப்ரத₃ாநமந்த்ரஸ்ய ஸவித்ரு ப₄க₃வாந் ருஷி: அநுஷ்டுப்ச₂ந்த₃:, ஸ்ரீஸூர்யநாராயணோ தே₃வதா । [5-41]

['ஸ்ரீஸூர்ய நாராயணனின் ப்ரீதியின் பொருட்டு அர்க்₄யப்ரத₃ானம் செய்கிறேன்' என்று ஸங்கல்பித்து. அர்க்₄யப்ரத₃ான மந்த்ரத்துக்கு ஸூர்யப₄க₃வான் ரிஷி, அநுஷ்டுப் ச₂ந்த₃ஸ், ஸ்ரீஸூர்யநாராயணன் தே₃வதை என்று அநுஸந்தி₄க்கவேண்டும்.] என்று ஸூர்யனுக்கு அந்தர்யாமியான ஸூர்யநாராயணனே அர்க்₄யப்ரத₃ானத்தால் உகப்பவன் என்று காட்டப்பட்டது. இருவித₄மான ஜபத்தைக் கூறும் ஆரும் அத்தியாயத்தில்,

ப்ருதி₂வி(த்₃வி)! த்வயா த்₄ருதா லோகா தே₃வி! த்வம் விஷ்ணுநா த்₄ருதா ।
த்வம் ச த₄ாரய மாம் தே₃வி! பவித்ரம் குரு சாஸநம் ॥ [6-5]

[பூ₄மிதே₃வியே! உன்னால் உலகங்கள் த₄ரிக்கப்படுகின்றன. நீ விஷ்ணுவால் த₄ரிக்கப்படுகின்றாய். நீ என்னை த₄ரிப்பாயாக. என்னுடைய ஆஸனத்தைப் பரிஶுத்₃த₄ப்படுத்துவாயாக.] என்று எல்லாவுலகங்களையும் த₄ரிக்கும் பூ₄மிதே₃வி விஷ்ணுவினால் த₄ரிக்கப்படுபவள் என்று முழங்கப்பட்டது. இப்படி விஷ்ணுபரத்வம் செய்திருக்கும் விஶ்வாமித்ர ஸ்ம்ருதியிலும் வேறு எந்த தெய்வத்துக்கும் பரத்வம் கூறப்படவில்லை. அடுத்ததான லோஹிதஸ்ம்ருதியில் எந்த தெய்வத்துக்கும் பரத்வம் கூறும் வசனங்கள் எதுவுமில்லை. ஆகையால் அதற்கடுத்த நாராயணஸ்ம்ருதியைக் காண்போம்.

விஶ்வாமித்ரஸ்ம்ருதிநிர்ணயம் முற்றிற்று.

நாராயணஸ்ம்ருதிநிர்ணயம்

இந்த நாராயணஸ்ம்ருதியிலும் முதல் எட்டு அத்தியாயங்களில் எந்த தேவதைக்கும் பரத்வத்தைக் காட்டும் எதுவுமில்லை. கடைசியான ஒன்பதாவது அத்தியாயத்தின் கடைசியில் கலியில் விலக்கப்பட்ட காரியத்தைச் செய்து தூரித்₃ரனாய் வாழும் மனிதனுக்குப் பிராயஶ்சித்தத்தை வர்ணிக்கும்போது,

பலாஷ்டகப்ரமாணேந தண்டு₃லேந ஹவி: பசேத் ।
கோ₃மூத்ரே விநிவேத்₃யைவ ஹரயே பரமாத்மநே ॥
ததே₃வ பு₄க்த்வா ஸாயாஹ்நே ஸ்வபேத்₃வை த₃க்ஷிணாஶிரா: ।
ஏவம் ஷண்மாஸக்ருத் விப்ர: பூர்வவத் ஶுத்₃தி₄மாப்நுயாத் ॥
ததோ க₃ங்கா₃ஜலே ஸ்நாத்வா ஸேதுத₃ர்ஶநமேவ வா ।
க்ருத்வா தத: புந: கர்ம க்ருத்வா ஶுத்₃தி₄மவாப்நுயாத் ॥
ஸ்வகர்மபரகர்மார்ஹ: ப₄வேதே₃வ ந ஸம்ஶய: ॥ [9-9...12]

[எட்டு பலம் அளவுள்ள அரிசியைக்கொண்டு ஹவிஸ்ஸை கோ₃மூத்ரத்தில் சமைக்கவேண்டும். அதைப் பரமாத்மாவான ஹரிக்கு நிவேத₃னம் செய்து, அதையே மாலையில் பு₄ஜித்து, (இரவில்) தெற்கே தலையை வைத்துத் தூங்கவேண்டும். இப்படி ஆறுமாதம் ப்ராயஶ்சித்தத்தை அநுஷ்டி₂க்கும் அந்தணன் முன்போலே பரிஶுத்₃த₄னுவான். அதற்குப்பின் க₃ங்கா₃ ஜலத்தில் நீராடியோ, சேதுவைக் கண்டோ அங்கு செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து, அதற்குப்பின் பரிஶுத்₃தி₄ அடைவான். தன் கர்மங்களைச் செய்வதற்கும், பிறர்க்குக் கர்மங்களைச் செய்விப்பதற்கும் தகுதியுடையவனுவான். இதில் ஐயமில்லை.] என்று ஹரியைப் பரமாத்மா என்று குறித்திருப்பதிலிருந்து, இந்த ஸ்ம்ருதியும் விஷ்ணு பரத்வத்தையே நிலைநாட்டுகிறது என்று விளங்குகிறது.

நாராயணஸ்ம்ருதிநிர்ணயம் முற்றிற்று.

இனி, கல்கத்தாபதிப்பில் அடுத்தபடி அச்சிடப்பட்டிருக்கும் ஶாண்டி₃ல்யஸ்ம்ருதி ஏற்கனவே ஆராயப்பட்டுவிட்டதாகையால், அதற்கடுத்தபடியுள்ள கண்வஸ்ம்ருதியைக் காண்போம்.

கண்வஸ்ம்ருதிநிர்ணயம்

இந்த ஸ்ம்ருதியில் த₄ர்மஸாரத்தை வர்ணிக்கும் முதலத்தியாயத்தில்,

யத்கிஞ்சித்₃வா க்ருதம் தேந பரமேஶ்வரதுஷ்டயே ।
தத₃க்ஷயமமோக₄ம் ஸ்யாத் ப்₃ரஹ்மஜ்ஞாநைகஸாத₄கம் ॥
யதா₂ஶாஸ்த்ரக்ருதம் ச ஸ்யாத் அஶாஸ்த்ரக்ருதமப்யலம் ।
பரமேஶ்வரதுஷ்ட்யர்த்த₂க்ருதம் தஸ்மாத் ததா₂ சரேத் ॥......
பரமேஶ்வர ஶப்₃த₃ம் ய: கர்மாதி₃ஷு ஸமாஹிதை: ।
ப்ரவதே₃த்₃வைதி₃கை: ஸித்₃தி₄: ப்₃ரஹ்மஶப்₃தே₃ாऽத₂வா ஸத₃ா॥
ஶ்ரீஶப்₃த₃பூர்வகோ நித்யம் தாவந்மாத்ரேண ஸா க்ரியா ॥
[11...16]

[அவனால் பரமேஶ்வரனின் உகப்பின் பொருட்டு எந்தக் காரியமானது செய்யப்பட்டதோ அது அழியாததாகவும், பெரும்பயனை விளைப்ப தாகவும் ப்3ரஹ்ம ஜ்ஞானத்திற்கு முக்கிய உபாயமாகவும் ஆகிறது. ஶாஸ்த்ரமுறைப்படி செய்யப்படாவிட்டாலும், பரமேஶ்வரனுடைய உகப்பிற்காகச் செய்யப்பட்டது ஶாஸ்த்ர முறைப்படி செய்யப்பட்ட தாகவே ஆகிறது. ஆகையால் கர்மங்களை அவ்வண்ணமே அநுஷ்டிக்கவேண்டும்..............எவன் பரமேஶ்வர ஶப்3த3த்தைக் கர்மம் முதலானவற்றில் பழக்கமுடைய வைதி3கர்களைக் கொண்டு உச்சரிக்கச் செய்கிறானோ அவனுக்கு ஸித்3தி4 ஏற்படுகிறது. ஸ்ரீஶப்3த3த்தை முன்னிட்ட ப்3ரஹ்ம ஶப்3த3த்தையாவது பரமேஶ்வர ஶப்3த3 ஸ்தா2னத்தில் எப்போதும் பிரயோகி3க்கலாம். இப்படிச் செய்தாலும் அக்கர்மம் பயனுடையதாகிறது.] என்று பரமாத்மாவைப் பரமேஶ்வர ஶப்3த3த்தாலும், ப்3ரஹ்ம ஶப்3த3த்தாலும் குறித்தார் கண்வர். இந்தப் பரமேஶ்வரன் யாரென்பதைப் பிற்பகுதிகளில் எப்படி நிர்ணயித்திருக்கிறார் என்பதைக் காண்போம்.

ப்3ரஹ்ம வை சதுர்ஹோதார: தேப்4யோ யஜ்ஞோऽதி4நிர்மித: |
ஸ ஹி நாராயணோ ப்3ரஹ்ம புருஷரூபேண தத்ர ச ||
வர்த்ததே சாநுவாகேந சோத்தரேண ஜக3ந்மய: |
ஸ்ருஷ்டிஸ்தி2திவிநாஶாநாம் கர்த்தா காரணகாரணம் ||
கரணஸ்யாபி கரணம் ஜக3ஜ்ஜந்மாதி3காரணம் |
ஸத்யஜ்ஞாநாநந்த3மயம் ஸத3ஸச்சிந்மயாத்மகம் ||
தத்3ரூபேணாவதீர்ணம் தத் தஸ்யாத்4யேதா ததா3த்மக: |
ப்3ரஹ்மவாத்3யுச்யதே ஸத்3பி4: ஸ ஹி யைர்ந நிஷித்4யதே ||
ஸ ஸர்வவேத3யஜ்ஞௌக4ஸத்கர்மவ்ரதக்ருந்மத: |
ஸ உ வை வைதி3க ஶ்ரேஷ்ட2: கர்மிஷ்ட2: கர்மடோ2ऽஶட2: ||
ஸர்வாசார்ய: ஸர்வப3ந்து4: ஸம்ப்ரதா3ய ப்ரவர்த்தக: |
ஸர்வாசாரஸ்தா2பகஶ்ச ஸர்வலோகவிலக்ஷண: ||
ஸூக்ஷ்மத4ர்மார்த்த2தத்த்வஜ்ஞ: ஸோऽயம் கில விஶேஷவித் |
வேத3மார்க்கா3நுஸாரீ ச பரம் வேதோ3க்தமேவ ஹி ||
கரோதி கர்ம நாந்யத்து கௌணமுக்2யே ததா2 ப2லம் |
தே3ஶகாலமஹாபாத்ரத்3ரவ்யயோகா3தி3கேக்ஷணே ||
முக்2யம் தத்ஸமநுஷ்டா2நம் குருதே கில ஸந்ததம் |
ஸத்கர்மபி4: ஸதா3 பூஜாம் கரோதி குலஸம்ப4வ: ||

ஸபத்ரபுஷ்பாதி3க்ருதா தே3வஸ்ய பரமாத்மந: ।
ப4வேந்ந து ஸதா3 பூஜா கிந்து ஸா கர்மபி4: க்ருதை: ॥
யதா2ஶாஸ்த்ராதி3விஹிதை: அலப்4யைர் மஹதீதி ஸா ।
ப்ரோச்யதே தத்3விஶேஷஜ்ஞை: ஸா ஹி ஸர்வோத்தமோத்-
ஸா ஸர்வஸாத4ாரணதோ ந கர்த்தும் ஶக்யதே கில । [தமா ॥
ஸாத4ாரணாஶ்ச புருஷா: தாத்3ருஶம் தூ3ஷயந்த்யபி ॥
தாம் க்ரியாம் தத்ஸ்வரூபம் ச தந்மந்த்ராந் வேத3வர்ஜிதாந் ।
மோசயந்த: ஸ்வகாம் பூஜாம் அதி4கத்வேந கேவலம் ॥
வர்ணயந்த: பரம் ப4ாவம் அஜாநந்த: ஶ்ருதே: பத3ம் ।
வ்யத்யாஸயந்தி ஸந்மார்க்கா3ந் அமார்க்கா3ந் வர்ணயந்த்யபி ॥
ததீ3யமார்க்க3ப4ாக் யோ வை வைதி3கோ‌ऽபி ந வைதி3க: ।
அக2ண்ட3வைதி3கோ மார்க்க3: ஸர்வேஷாமேவ கர்மணாம் ॥
ஆரம்ப4காலே ஸங்கல்பே பரமேஶ்வரதுஷ்டயே ।
கரிஷ்யாமீதி ஸங்கல்ப்ய தத்தத்கர்ம யதா2விதி4 ॥
ஸமநுஷ்டா2ய தத்பஶ்சாத் தத்தத் கர்மாந்த ஏவ ஹி ।
ப்ரீணாது ப4க3வாந் தே3வ: பரமாத்மா ஸதா3 ஹரி: ॥
அநேந கர்மணா சேதி த்யாக3ம் குர்யாத் ஜலேந வை ।
ஏதச்சக்ரத4ரஸ்யாஸ்ய பூஜநம் மஹதே3ககம் ॥
ஸத்3பி4ருக்தம் வித4ாநேந பரமைர் வைதி3கோத்தமை: ।
பூஜநம் தே3வதே3வஸ்ய பரம் கர்மபி4ரேவ வை ॥
கதி2தம் தத் ஸமாஸேந தாநி கர்மாணி ஸாம்ப்ரதம் ।
ப்ரவக்ஷ்யாமி க்ரமேணைவ ப்3ரஹ்மஜ்ஞாநைகஸாத4கம் ॥
ஔபாஸநம் வைஶ்வதே3வம் பார்வணம் ச ததா2ஷ்டகா: ।
மாஸிஶ்ராத்3த4ம் ஸர்ப்பப3லி: ஈஶாநப3லிரேவ ச ॥
அக்3நிஷ்டோமோ‌ऽதிபூர்வஶ்ச உக்த2ய: ஷோட3ஶஸம்ஜ்ஞிகா: ।
அதிராத்ராப்தோர்யாமஶ்ச வாஜபேயஶ்ச ஸப்த வை ॥......

[394-415]

["ப்3ரஹ்ம வை சதுர்ஹோதார: । சதுர்ஹோத்ருப்4யோதி4 யஜ்ஞோ நிர்மித: ॥" [காட2கம் 3-5-22] [வேத3மந்த்ரங்கள் சதுர்ஹோதாக்கள் என்று சொல்லப்படுகின்றன. அவற்றுக்காகவே யஜ்ஞம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது] என்று வேத3ம் ஓதுகிறது. அந்த யஜ்ஞமே புருஷ ரூபமாக வடிவெடுத்திருப்பவன் நாராயணனாகிற ப்3ரஹ்மம், புருஷ

ஸூக்தத்தின் உத்தராநுவாகத்தில்—உலகுக்கு அந்தர்யாமியாகவும் படைத்தளித்தழிக்கும் கர்த்தாவாகவும், பிரமன் முதலான காரண பூ₃தர்களுக்கெல்லாம் காரணமாகவும், உபாயங்களுக்கெல்லாம் உபாயமாகவும், உலகிற்கு உபாத₃ானம் முதலான எல்லாக் காரண மாகவும், ஸத்யஜ்ஞாநாநந்த₃மயமாகவும், ஸத் எனப்படும் ஸ்தூ₂ல வுலகிற்கும், அஸத் எனப்படும் ஸூக்ஷ்மவுலகிற்கும், சேதநர்களுக் கும் அந்தர்யாமியாகவும், வேத₃ரூபமாக அவதரித்திருப்பவனாக வுமுள்ள பரம்பொருள் அவனே. வேத₃த்தை ஓதுகின்ற ப்₃ரஹ்மவாதி₃ ப்₃ரஹ்மத்தை இல்லைசெய்யாத நல்லோர்களால் அந்தப் பரம்பொருளாகவே கூறப்படுகிறான். அவனே எல்லா வேத₃ங்களிலும் காணப்படும் யஜ்ஞங்கள், நற்கருமங்கள், விரதங்கள் ஆகியவற்றைச் செய்தவனாக எண்ணப்படுகிறான். அவனே வைதி₃கர் தலைவன். கர்மம் செய்பவர்களில் சிறந்தவன். கர்மங்களை அறிந்த வர்களில் தலையானவன். தீமையில்லாதவன். அனைவர்க்கும் ஆசாரி யன். அனைவர்க்கும் உறவினன். வைதி₃க ஸம்ப்ரத₃ாயத்தை நடத்துமவன். எல்லா ஒழுக்கங்களையும் நிலைநிறுத்துபவன். உயர்ந் தோர் அனைவரிலும் உயர்ந்தவன். அறங்களைப் பற்றிய நுண் ணறிவுடையவன். இவனே சிறந்ததையெல்லாம் அறிபவன். வேத₃மார்க்க₃த்தின்படி நடப்பவன். வேத₃த்தில் சொல்லப்பட்ட மேலான கர்மத்தையே செய்வான். மற்றதைச் செய்யமாட்டான். அமுக்₂யத்வம், முக்₂யத்வம், ப₂லம், தே₃ஶம், காலம், நல்ல பாத்ரம், த்₃ரவ்யம் இவற்றின் சேர்த்தி ஆகியவற்றைக் கவனித்து, எது முக்கிய மானதோ அதை அவன் எப்போதும் அநுஷ்டி₂க்கிறான். நற்குடிப் பிறந்த இவன் நற்கருமங்களால் பரமாத்மாவை எப்போதும்ஆராதி₄க்கி றான். இலை, புஷ்பம் முதலானவற்றைக்கொண்டு தே₃வனான பரமாத் மாவுக்குச் செய்யும் பூஜையே எப்போதும் அவனுக்கு ஆராத₄னமாகி விடாது. நல்ல ஶாஸ்த்ரம் முதலானவற்றால் விதி₄க்கப்படுபவையாய். அரியவையான கர்மங்களால் செய்யப்படும் பூஜையே பூஜையாகும். அந்தப் பூஜையன்றோ சிறந்ததாகக் கர்மங்களின் சிறப்பறிந்தவர் களால் கூறப்படுகின்றது. அந்தப் பூஜையே உத்தமங்களனைத்துக் கும் உத்தமமானது. அது அனைவராலும் செய்வதற்கு அரிதன்றோ. ஸாமாந்ய மனிதர்கள் அந்தக் கிரியையையும். அதன் ஸ்வரூபத்தை யும், அதைச் செய்பவனையும், அதன் மந்திரங்களையும் தூ₃ஷிக்க வும் செய்வார்கள். வேத₃த்தில் சொல்லப்படாத தங்களுடைய பூஜையைச் சிறந்ததாக வர்ணித்துக்கொண்டு, வேத₃த்தில் சொல் லப்பட்ட இப்பூஜையின் சிறப்பை அறியாதவர்களாய், நன்னெறியை வேறுபடுத்தித் தீநெறியை வர்ணிக்கிறார்கள் அவர்கள். அவர்களு

டைய நெறியைப் பின்பற்றும் வைதிகன் அவைதிகனேயாவான். மாறுபடுத்தப்படாத வைதிக நெறியே எல்லாக் கர்மங்களுக்கும் நன்னெறியாகும். ஸங்கல்பத்தின் தொடக்கத்தில் 'பரமேஸ்வரனின் உகப்பின் பொருட்டுச் செய்கிறேன்' என்று ஸங்கல்பித்து, அவ் வக்கர்மங்களை முறைப்படி அநுஷ்டித்து, அக்கர்மங்கள் முடிந்தபின் 'யஜ்ஞவானாய், தேவனாய், பரமாத்மாவான ஹரி இக்கர்மத்தால் எப்போதும் உகப்படையட்டும்' என்று ஜலத்தினால் தர்ப்பணம் செய்யவேண்டும். இதுவே சக்ரதாரியான எம்பெருமானுக்கு ஒப் பற்ற பெரிய ஆராதனமாக, தலைசிறந்த வைதிகோத்தமர்களான நல்லோர்களால் முறைப்படி சொல்லப்பட்டது. கர்மங்களால் தேவ தேவனை ஆராதிப்பதே ஆராதனமாகச் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு முக்ய ஸாதனமான அந்தக் கர்மங்களைச் சுருக்கமாக வரிசைக்கிரமப்படி சொல்லுகிறேன்.—(1) ஔபாஸநம், (2) வைஶ்வதேவம், (3) பார்வணஶ்ராத்தம், (4) அஷ்டகா ஶ்ராத்தம், (5) மாதப்பிறப்பின் போது செய்யப்படும் ஶ்ராத்தம், (6) ஸர்ப்பபலி, (7) ஈஶாநபலி, (8) அத்யக்நிஷ்டோமம், (9) உக்த்யம், (10) ஷோடஶக்ரியைகள், (11) அதிராத்ரம், (12) அப்தோர்யாமம், (13) ஏழு வாஜபேயங்கள்........] என்று ஸர்வகர்ம ஸமாராத்யனான பரமேஸ்வரன் நாராயணன் என் றும், ஹரி என்றும் சொல்லப்படுபவன் என்றும், அவனே பரமாத் மாவும் ப்ரஹ்மமும் ஆவான் என்றும் முழங்கப்பட்டது. இவ்வண்ண மாகக் கர்மாநுஷ்டானத்தின்மூலம் ஹரியை ஆராதிப்பதை விளக்கி,

நைமிஶா(ஷா)தி மஹாக்ஷேத்ரே வித்யமாநேஶ்வரார்ச்சநாத்||
முக்திர்நாத்ர விரோதோ ஹி தஸ்மாத் குர்யாத் ஹரே: ஸதா |
ப்ரதிமாஸு புராணேஷு ம்ருத்தாருப்ரஸ்தராத்மஸு ||
பத்ரை: புஷ்பை: பலைரர்ச்சாம் ஷோடஶைருபசாரகை: |
நித்யபூஜாம் விஶேஷேண ததா நைமித்திகா அபி || [446-448]

[நைமிஶாரண்யம் முதலான திவ்யதேஶங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆராதிப்பதால் மோக்ஷம் ஏற்படும்; இதில் விரோத மில்லை; ஆகையால்—பழையனவான திவ்யாலயங்களில் மண், மரம் முதலானவற்றால் அமைந்த பிம்பங்களில், இலைகள், மலர்கள், பழங்கள் முதலானவற்றைக்கொண்டு பதினாறு உபசாரங்களையும் செய்து, ஹரிக்கு எப்போதும் திருவாராதனம் செய்யவேண்டும்; நித்யபூஜையையும், நைமித்திக பூஜைகளையும் விஶேஷமாகச் செய்ய வேண்டும்] என்று எம்பெருமானுடைய அர்ச்சைத் திருமேனியை ஆராதனம் செய்வதாலும் மோக்ஷம் கிட்டும் என முழங்கப்பட்டது.

ஸாத்வதம் விதி₄மாஸ்தா₂ய கீ₃தந்ருத்தார்ப்பணேந ச ।
ஹரேர்கா₃நம் ச ந்ருத்தம் ச நடநம் ச விஶேஷத: ॥
ஸதா₂ ப்ராஹ்மணஜாதீநாம் விஹிதம் நித்யகர்மவத் ।
அர்த்த₄ாஸ்தமித ஆதி₃த்யே புநரர்த்தே₄ாத₃யேऽநிஶம் ॥
தி₃வைவாராத₄நம் தஸ்ய தே₃வஸ்ய பரமாத்மந:।
கைவல்யத₃ம் ஸத்₃ய ஏவ ததா₂ தத₃வலோகநம் ॥
யத்கிஞ்சித் க்ரியதே கர்ம லௌகிகம் வைதி₃கம் ததா₂ ।
பே₄ாஜநம் க₃மநம் தா₃நம் அலங்காரோऽத₂ பூ₄ஷணம் ॥
ஸர்வம் தத்ப்ரீதயே குர்யாத் தந்நிர்மால்யபரோ ப₄வேத் ॥
[452-455]

[பாஞ்சராத்ர விதி₄யைப் பின்பற்றித் திருவாராத₄னம் செய்யும்போது பாடல், நாட்டியம் முதலானவற்றை ஸமர்ப்பிப்பதன் மூலமும் எம்பெருமானை ஆராதி₄க்கவேண்டும். ப்₃ராஹ்மண ஜாதியைச் சேர்ந்தவர்கள் எப்போதும் நித்யகர்மம் செய்வதுபோல் ஹரியைக் குறித்துச் சிறப்பாகப் பாடுவதும், நாட்டியமாடுவதும், நாடகமாடுவதும் செய்யவேண்டும் என்று ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்டுள்ளது. ஸூர்யன் பாதி அஸ்தமித்துக் கொண்டிருக்கும்போதும், பாதி உதித்துக்கொண்டிருக்கும்போதும் எப்போதும் பரமாத்மாவான அந்த தே₃வனுக்குப் பகலிலேயே திருவாராத₄னம் செய்வதும், அவ்வண்ணமே அவனை ஸேவிப்பதும் அந்தப் பிறப்பிலேயே மோக்ஷமளிக்கும், உணவளிப்பது, எழுந்தருளப்பண்ணுவது, தா₃னம் செய்வது, (மலர் முதலானவற்றால்) அலங்கரிப்பது, திருவாப₄ரணங்களால் அழகுபடுத்துவது ஆகிய எந்த லௌகிக வைதி₃க கர்மங்களைச் செய்தாலும், அவையனைத்தையும் அவனுடைய உகப்பிற்காகவே செய்யவேண்டும். அவன் அமுதுசெய்த ப்ரஸாத₃ங்களையே உண்ணவேண்டும்.] என்று அவனது திருவாராத₄னத்தைச் சிறப்பாக விளக்கி அதையே அவனுகப்புக்காக அந்தணர்கள் செய்யவேண்டும் என்று விதி₄த்து, அவனுடைய ப்ரஸாத₃ங்களையே உண்ணவேண்டும் என நியமித்ததும் குறிக்கொள்ளத்தக்கது.

ஸாயுஜ்யநாமிகாம் முக்திம் லப₄ந்தே ஸத்₃கு₃ரோஸ்தராம் ।
ப்ரஸாதே₃நைவ க்ருபயா பித்ருணுமர்ச்சயா ததா₂ ॥
அயமேவ மஹாமார்க்கோ₃ வேதோ₃க்தாத்யந்தஸௌலப₄: ।
அந்ய: பந்தா₂ நாயநாய ஶ்ருதிரேவமுவாச ஸா ॥ [467, 468]

நான் தரைக்கிடை கிடக்க நீ படுக்கையிலே பொருந்துவதே! எனக்கு மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாயிருக்க நீ படுத்த படுக்கைப்பரப்பிருந்தபடியே! இத்தை விட்டு உனக்குச் செய்ய வேண்டுமத்தைச் சொல்லலாகாதோ? என்ன; (q பன்னி—இருந்தித்யாதி₂) ஒருகால் சொல்லிவிடுகையன்றிக்கே பலகாலு மிருந்து, ஆனை இடர்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலை குலைய வந்து விழுந்தாற்போலே விரைந்துவந்து, என்னோடே கலந்துபோகிற ஸமயத்தில் அணைத்து ஸ்மிதம்பண்ணி வருமளவும் ஜீவித்திருக்கும்படி விளைநீரடைத்துப் r போனபோதைச்

நான் எம்பெருமானைப் பிரிந்து தரையிலே கிடந்து துவளும் போது, நீ வாய்ப்பான படுக்கையிலே பொருந்தி இன்புறுவதே! 'மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ'[திருவாய் 9-9-4] என்கிற படியே எனக்கு மலர்ப்படுக்கை சுடுவதாயிருக்க, நீ மலர்ச்சோலைப் பொந்துகளிலே இனிதாகக் கண் வளர்வதே! என்று கருத்து. "இப்படி உனது நிலையையும், என் நிலையையும் சொல்லுவதை விட்டு உனக்கு நான் என்ன செய்யவேண்டும் என்பதைக்கூறாய்" என்று குயிலுக்குக் கருத்தாகக் கொண்டு கூறுகிறாள் மேலே—*(பன்னி……கூவாய்)* *(பன்னி எப்போதும் இருந்து கூவாய்)* எனக்குத் தூதாகச் செல்லும் நீ ஒருகால் சொல்லிவிடுவது போதாது. பலகாலும் அவன் முன்னேயிருந்து சொல்லி, அவன் என்னிடம் வரும்படி வார்த்தை சொல்லவேணும். *(விரைந்து வரக்கூவாய்)* (151-ம் பக்கம் 46-வது ப்ரமாணத்தில் காட்டியபடி) க₃ஜேந்த்₃ராழ்வான் துன்புற்ற மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து விழுந்தாற்போலே, விரைந்து என்னிடம் வரும்படியாகக் கூவுவாய்—(வார்த்தை சொல்லுவாய்). *(என் பவளவாயன் வரக்கூவாய்)* என்னோடு கலந்து பிரிகிற காலத்தில் என்னை அணைத்து, தான் திரும்பி வரும் வரையிலும் இதை நினைத்தே நான் உயிர் வாழ்ந்திருக்கும்படி, பயிருக்கு நீர் பாய்ச்சுவாரைப் போலே புன்முறுவல் செய்து போனபோது அவன் திருவத₄

q பன்னல் - சொல்லல். r,s "பவளவாயன்" என்றதுக்கு-

r₂செவ்வியோடும், 8 அத₄ரத்தில் பழுப்போடும் வந்து அணைக்கும் படியாகக் கூவப்பாராய் என்கிருள். 1.

ஐந்தாம் திருமொழி—இரண்டாம் பாட்டு

வெள்ளை விளிசங் கிடங்கையில் கொண்ட
விமல னெனக்குருக் காட்டான்
உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளும்
உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்
களித்திசை பாடுங் குயிலே!
மெள்ள விருந்து மிழற்றி மிழற்ருதுஎன்
வேங்கட வன்வரக் கூவாய்.

பதவுரை: — கள் அவிழ் — தேன்பெருகாநின்றுள்ள, **செண்பகம் பூ**—செண்பகப்பூவிலே, **மலர்கோதி** — (அஸாரமான அம்சத்தைத் தள்ளி) ஸாரமான அம்சத்தை அநுப₄வித்து, **களித்து**—(அதனுல்) ஆநந்த₃மடைந்து,**இசை பாடும் குயிலே !**—(அந்த ஆநந்த₃த்திற்குப் போக்குவீடாக) இசைகளைப் பாடாநின்றுள்ள கோகிலமே!, **வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட** — சுத்₃த₄ஸ்வப₄ாவமாய் (கைங்கர்யருசியுடையாரை) அழைக்குமதான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை இடக்கையிலே ஏந்திக்கொண்டிருக்கிற, **விமலன்**—பரிசுத்₃த₄ஞன பரமபுருஷன்,**உரு**-தனது தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹத்தை, **எனக்குக் காட்டான்**—எனக்குக் காண்பிக்கமாட்டேன் என்கிருன்; (அதுவுமல்லாமல்) **உள்ளம்**—என்னுடைய ஹ்ருத₃யத்தினுள்ளே, **புகுந்து**—வந்து புகுந்து, **என்னை நைவித்து**—என்னை நைந்துபோம்படி பண்ணி, (அவ்வளவிலே நான்

ரத்திலே புதிதாக ஏற்பட்ட சிவப்பும், திருவத₄ரத்திற்கு இயற்கையாக உள்ள சிவப்பும் கூடிய அப்பவளச் செவ்வாயன் வந்து என்னை அணைக்கும்படியாகக் கூவுவாயாக என்கிருள். 1.

தன்னேட்டைக் கலவியாலுண்டான சிவப்பாதல்; ஸ்வாப₄ாவிகமான சிவப்பாதல். r₂ செவ்வி - சிவப்பு. 1.

முடிந்துபோவதாயிருந்தால், இன்னமும் என்னை ஹிம்ஸிப்பதற்காக முடியவொட்டாமல்) **நாளும் உயிர்பெய்து**—நாள்தோறும் ப்ராணனைப் பெருக்கடித்து, **கூத்தாட்டு காணும்**—என்னைத் தத்தளிக்கச்செய்து வேடிக்கைபாராநின்றான்; (நீ செய்யவேண்டியதென்னவென்றால்) **இருந்து**—என் அருகில் இருந்துகொண்டு, **மெள்ள மிழற்றி மிழற்றாது** — உன் மழலைச் சொற்களைச் சொல்லி விலாஸசேஷ்டிதங்களைப் பண்ணாமல், **என் வேங்கடவன் வர**—எனக்காகத் திருவேங்கடமலையிலே வந்துநிற்கிற எம்பெருமான் (இங்கே) வரும்படியாக, **கூவாய்**—கூப்பிடவேணும்.

அவ :— இரண்டாம் பாட்டு. (வெள்ளை இத்யாதி,) உ **கீழ் நின்ற நிலையை அறிவிக்கவேணுமிறே, மேல் அதுக்குப் பரிஹாரம் பண்ணும்போது; இதுகாண் என் நிலையிருக்கிறபடி என்கிறாள்.**

வ்யா :— (வெள்ளை b விளி சங்கு) **ஶ்யாமமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைத்தாய், பிற்பாடரை 'அடிமைசெய்ய வாருங்கோள்'' என்று அழைப்பாரைப் போலேயிருக்கிற த்வநியையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை.**

அவ:— தான் இப்போதிருக்கும் நிலையைத் தெரிவித்தால் தான், குயிலால் அதற்குப் பரிஹாரம் தேடமுடியுமாகையாலே, அந்நிலையைக் கூறுகிறாள்.

வ்யா:— (வெள்ளை விளிசங்கு) **நீலநிறமுடைய திருமேனிக்குப் பரபாகரஸத்தை (வர்ணச்சேர்த்தியழகை) அளிக்கும் வெள்ளை நிறத்தை உடையதாய், அடிமை செய்யத் தாழ்த்தவர்களை "அடிமைசெய்ய வாருங்கள்" என்று அழைப்பது போலே இருக்கும் ஒலியை உடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை.**

அரு:— இரண்டாம் பாட்டு. (வெள்ளை இத்யாதி,) உ இரக்கிறவள் தன் அவஸ்தையைச் சொல்லுவானென்? என்ன அருளிச்செய்கிறார் (**கீழ்நின்ற இத்யாதி,**)

(இடங்கையிற்கொண்ட) இடக்கையிலே த₄ரித்த. வலக்கை யிலேயாகில். c "வலக்கையாழி இடக்கைச் சங்கம்" என்பர் ; இல்லையாகில், "இடங்கை வலம்புரிநின்ருர்ப்ப" என்பர்கள். ஏதேனுமாக, இருந்தபடி ஆத₃ரிக்குமவர்களிறே. d ராஜபுத்ரன் கையில் அறுகாழிக்குத் தோற்றிருப்பாரைப்போலே, கையும் ஸ்ரீபாஞ்சஜந்யமுமான அழகுக்குப்போலேகாணும் இவள் தோற்றிருப்பது. (விமலன்) விக்₃ரஹங்களும் தி₃வ்யாயுத₄ங்க ளும் பிறர்காணக் கண்டதென்று இருக்குமவன். 70. "न चाकारो नायुधानि—भक्तानां" (ந சாகாரோ நாயுத₄ாநி — ப₄க்தாநாம்) என்றிறே இருப்பது. "பிறர்க்காக நம் வடிவுகண்டது" என் றிருக்குமவன். (எனக்கு) ஆசையின் எல்லையிலே நிற்கிற

(இடங்கையில் கொண்ட) இடக்கையிலே த₄ரித்த. இது வலக்கை யில் சக்ரத்தை த₄ரித்திருப்பதற்கும் உபலக்ஷணம். *"வலக்கையாழி இடக்கைச் சங்கம்"* [திருவாய் 6-4-9] *"இடங்கை வலம்புரி நின் ருர்ப்ப, எரிகான்று அடங்கார் ஒடுங்குவித்ததாழி"* [இர-திருவ 71] என்று ஆழ்வார்களும் இரண்டு திருக்கைகளிலுமுள்ள இரண்டு தி₃வ்யாயுத₄ங்களையும் சேர்த்தே அநுப₄வித்தார்க ளன்ருே. ராஜபுத்ரனைக் காதலிக்கும் பெண்கள் அவன் கையி லுள்ள மோதிரத்துக்குத் தோற்றிருப்பதுபோலே இவளும் திருக்கையும் ஸ்ரீபாஞ்சஜந்யமுமான சேர்த்தியழகுக்குத் தோற்றிருக்கிறபடி. *(விமலன்)* தன்னுடைய திருமேனிகளும், தி₃வ்யாயுத₄ங்களும் தனக்கென்றிராமல், தன் அடியார்க்காக என்று நினைத்திருக்கும் பரிஶுத்₃தி₄யை உடையவன். (229-ம் பக்கம் 70-வது ப்ரமாணத்தில் காட்டியபடி) ஜிதந்தை யிலும் இவன் தன்னுடையவையனைத்தையும் தன்னடியார்க் காகவே கொண்டிருப்பவன் என்று கூறப்பட்டதன்ருே. *(எனக்கு)* ஆசையின் எல்லையிலே நிற்கிற எனக்கு. *(உருக்*

---

b விளித்தல்-ஶப்₃தி₃த்தல். c ஸ்ரீபாஞ்சஜந்யத்தை முன்னே சொல்லுவானென் ? என்ன, தனக்கு ப்ரகாஶித்தபடியே என்கிருர் (வலக்கை இத்யாதி₃) அதாவது - இப்பாட்டில் திருவாழியைச் சொல்லாவிட்டாலும் ஸ்த₂லாந்தரங்களிலே ஒக்க எடுக்கையாலே அதுக்கும் உபலக்ஷணம் என்றபடி. d அன்றியே, தான் தோற்றபடியைச் சொல்லுகிருள்

எனக்கு. (e உருக்காட்டான்) எனக்குக் காட்டாதே யாருக்குக் காட்டவிருக்கிறன் ? மீனுக்குத் தண்ணீர் வார்ப்பாரைப் போலே, நித்யஸூரிகளுக்குக் காட்டவிருக்கிறனே ? வடிவின் வாசியறியாத ஸம்ஸாரிகளுக்குக் காட்டவிருக்கிறனே ? f [காசினொளியில் திகழும்வண்ணங்காட்டீர்] பொன்போலே திகழாநின்றுள்ள வடிவை எனக்குக் காட்டுகிறிலீர். [எம்பெருமான் வாசிவல்லீர்] உம்முடைய வடிவின் வீறும், பெறுகிற எங்களுடைய சிறுமையும் நேராகக் கணக்கிடவல்லீர். [இந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே] வாசியறியாதே — தரமிடாதே தரவந்தவிடத்தே வாசிபார்க்கப் பார்த்தீராகில் f_2 உம்

காட்டான்) காணுவிடில் த₄ரியாத எனக்குத் தன் வடிவையும் அழகையும் காட்டாதே யாருக்குக் காட்டநினைத்திருக்கிறன் ? தண்ணீரில் வாழும் மீனுக்குத் தண்ணீர் த₄ர்மம் செய்வது போலே தன்னை எப்போதும் அநுப₄வித்துக் கொண்டிருக்கும் நித்யஸூரிகளுக்குக் காட்ட நினைத்திருக்கிறனே? இத்திரு மேனியின் பெருமையை அறியாமையாலே அதைக்காண ஆசைப்படாத ஸம்ஸாரிகளுக்குக் காட்ட நினைத்திருக்கிறனே? இவ்விடத்தில் "காசினொளியில் திகழும்வண்ணம்" [பெரிய திருமொழி 4-9-4] என்று தொடங்கும் திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்தி அநுப₄விக்கத்தக்கது:— [காசினொளியில் திகழும் வண்ணம் காட்டீர்] பொன்போலே திகழ்கின்ற தேவரீரது திருமேனியை, அதைக் காண ஆசைப்பட்டிருக்கும் எனக்குக் காட்டமாட்டேன் என்கிறீரே. [எம்பெருமான் வாசிவல்லீர்] உம்முடைய திருமேனியின் சிறப்பையும், அதை ஆசைப்படுகிற எங்களுடைய சிறுமையையும் துல்லியமாகக் கணக்கிட வல்லவராய் இருக்கிறீர்! [இந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே] பெரியவர் சிறியவர் என்கிற வேறுபாடு காணுமல், அவரவர் பெருமை சிறுமைக்குத் தக்கபடி படியளப்பது என்னும் நியமமில்லாமல்

என்கிறர் (ராஜபுத்ரன் இத்யாதி,) e உரு - வடிவும், அழகும். e, f, f_2 "எனக்கு" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம் தோற்றுகிறது; "பிறர்க்காக நம் வடிவு கண்டது" என்றிருக்குமவன் "எனக்கு உருக்காட்டான்" என்றபோதே

முடைய உடம்பை நீரே கட்டிக்கொண்டு கிடந்து வாழ்ந்து போம். (உருக்காட்டான்) விடாய்த்தார்க்குத் தண்ணீர் வாராதாரைப்போலே. (உள்ளம் புகுந்து) வடிவை மறந்து பிழைக்கவும் ஒட்டுகிறிலன். என் ஹ்ருத₃யத்திலே வந்து புகுந்து. (என்னை நைவித்து) ஹ்ருத₃யத்திலே புகுந்தால் நைவோடே தலைக்கட்டியல்லது நில்லாதிறே. ''நினைதொறும்'' என்றும், ''நினைந்து நைந்து'' என்றும் சொல்லுகிறபடியே. (நாளும் உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்) நெஞ்சிலே புகுந்து மறக்கவொண்ணாதபடி பண்ணும்; ஸந்நிஹிதரைப்

அனைவர்க்கும் தூ₄ளி த₃ானமாகத் திருமேனியை வழங்க வந்த இடம் அர்ச்சாவதாரம். அந்த இடத்தில் எங்களுடைய சிறுமை பார்த்துத் திருமேனியைத் தாராதொழிந்தீராகில், உம்முடைய உடம்பை நீரே கட்டிக்கொண்டு கிடந்து வாழ்ச்சி பெற்றுப் போவீராக — என்றாரன்றோ திருமங்கையாழ்வார். (*உருக்காட்டான்*) தாகமெடுத்தவர்களுக்குத் தண்ணீர் வார்க்காதவர்களைப் போலே, திருமேனியைக் காண ஆசைப்பட்ட எங்களுக்கு அதைக் காட்டுகின்றிலன். ''காட்டாமலிருந்தாலும், நிம்மதியாய் இருக்கவும் விடுகின்றிலனே'' என்கிறாள் மேலே — (*உள்ளம் புகுந்து*) இத்திருமேனியை மறந்து பிழைத்திருக்கவும் முடியாமல் என்நெஞ்சிலே வந்து புகுந்தான். (*என்னை நைவித்து*) இதயத்தில் புகுந்தால் அதை அநுப₄விக்க ஆசைப்படும் இவளுக்கு நைந்து நைந்து கரையாமலிருக்க முடியாதே. ''நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்து உகும்'' [திருவாய் 9-6-2] என்றும், ''நினைந்து நைந்து உள்கரைந்து உருகி'' [திருவாய் 1-5-2] என்றும் ஆழ்வார் அருளிச்செய்தாரன்றோ. (*நாளுமுயிர் பெய்து கூத்தாட்டுக் காணும்*) சித்ரவதை₄ செய்பவர்கள் வதைக்கப்படுகிறவனை உயிர்போகும்நிலை அடையும்படி துன்புறுத்தி, மறுபடியும் த₄ாரகங்களை அளித்து உயிர்உண்டாக்கி

தன்னுடம்பைக் கட்டிக்கொண்டிருக்கிறான் என்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் (காசினௌியின் இத்யாதி₃) (உயிர்பெய்து) பெய்கை - இடுகையாய், நாள்தோறும் உண்டாக்குகை.

போலே ப்ரகாமித்தவாறே அணேக்கக் கைநீட்டி, கைக்குள் அகப்படாமையாலே நோவுபட்டு, பின்னேயும் முடிந்து பிழைக்கவும் பெருதே, க்ஷணிகபதார்த்தம்போலே முடிந்தது ஜீவிப்பதாய்க்கொண்டு உருவ நோவுபட்டுச் செல்லாநிற்குமாய்த்து. இப்படித் துடிக்கவிட்டு இதுதானே போதுபோக்காயிராநின்ருன்.

(h கள்ளவிழித்யாதி₃) நான் இப்படி நோவுபடாநிற்க, உன்னவஸ்தை₂யிருந்தபடியென்! i மது₄விரியாநின்றுள்ள செண்பகப்பூவில் j ருஜீஷமான அம்மத்தைக் கழித்து மலரைக்கோதி, நான் பூக்காண வொருவ நீ களித்து, அந்த

மறுபடியும் துன்புறுத்தி இப்படியே படாதபாடுபடுத்துவர்கள். அப்படியே இவனும் என் நெஞ்சிலே புகுந்து என்னுல் அவனே மறக்கமுடியாதபடி பண்ணுவான்; இப்படி அருகில் இருப்பவனேப்போலே நெஞ்சில் தோற்றினவுடன் நான் அவனே அணேக்க எண்ணிக் கைநீட்டுவேன்; இவன் நெஞ்சிலேயே இருக்கையால் கைக்குள் அகப்படாமையாலே நோவுபடுவேன். ஓரேயடியாக இறந்து, இத்துன்பத்திலிருந்து பிழைக்கவும் முடியாதபடி மறுபடிமறுபடி நெஞ்சிலே தோற்றி உயிருட்டி அணேப்பதற்கு ஆசையை விளேத்து அதையளிக்காமல் படுகுலேயடிக்கையாலே, கணநேரமே வாழும் பொருள்போலே சாவதும் உயிருண்டாவதுமாய் எப்போதும் துன்புறுவதே வாழ்க்கை நடைமுறை ஆகிவிட்டது எனக்கு. இப்படிப் படாதபாடு படுத்தி இதையே போதுபோக்காகக்கொண்டு, நான் துடிப்பதைக் கண்டு களிக்கின்ருன்.

(கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக் களித்து இசை பாடும் குயிலே) நான் இப்படித் துன்புற்றிருக்கும்போது, நீ இன்பத்தின் எல்லேயிலே இருக்கின்ருயே! இது தகுமோ? தேன் விழாநிற்கும் செண்பகப்பூவில் கோதான பகுதியை நீக்கி, மலரின் ஸாரமான பகுதியை அநுப₄வித்து, அதனுல் இன்புற்று, அந்த இன்பத்திற்குப் போக்குவீடாக இசைபாடு

j ருஜீஷம் - கோது. h,i கள் - தேன்; அவிழ்தல் - வீழ்தல்.

ஹர்ஷம் வழிந்தாற்போலேயிருக்க, இசை பாடுகிற குயிலே ! (மெள்ள) அருகேயிருந்து நிரம்பா மென் சொற்களைச்சொல்லி விலாஸசேஷ்டிதங்களைப் பண்ணாதே (என் வேங்கடவன் வரக் கூவாய்) ஸ்ரீமிதிலையில் புறச்சோலையிலே, பிராட்டியைக் கைப் பிடிக்கைக்காக வந்து விட்டுக்கொண்டிருந்தாற்போலே, எனக் காகத் திருமலையிலேயிருந்தான்; நாலடியும் வரும்படியாக நீ கூவவல்லையே. "பரமபதத்தைவிட்டுத் திருமலையிலேவந்து நிற் கிற நிலை, தன்னுடைய ஸ்வயம்வரத்துக்காக"என்றிருக்கிறாள் 2.

ஐந்தாம் திருமொழி—மூன்றாம் பாட்டு

மாதலி தேர்முன்பு கோல்கொள்ள மாயன்
இராவணன் மேல்சர மாரி
தாய்தலை அற்றற்று வீழத் தொடுத்த
தலைவன் வரவெங்குங் காணேன்
போதலர் காவில் புதுமணம் நாறப்
பொறிவண்டின் காமரம் கேட்டுஉன்
காதலி யோடுடன் வாழ்குயி லே!என்
கருமாணிக் கம்வரக் கூவாய்.

